DIGITIZED

DL
N37.18.1
2104821

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

# JNANASAGARAM

இது

முப்பத்து நான்கு ஆண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

**A BI-MONTHLY**

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௮, தை.

திருமலர், ௧௮.] [இதழ், ௧.

## பொருளடக்கம்

முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர் (முகப்பு)

(Ancient and Modern Tamil Poets),

சிவஞானபோத ஆராய்ச்சி

(Critique of Siva Jnana Bodham)

இளைஞர்க்கான இன்றமிழ் (தொடர்ச்சி)

(Pure Tamil Reader for the Young, second book),

ஆசிரியர்:

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

**SWAMI VEDACHALAM,**

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்திற்

**T. M. PRESS**

பதிப்பிக்கப்பட்டது.

27th January., 1937

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூபா காலணா

All Rights Reserved.

ஓம்

# மறைமலையடிகளின் அறுபதாம் ஆண்டு நிறைவுக்கு வாழ்த்துங் காணிக்கையும்

நிகழுந் தாதுஆண்டு ஆடித்திங்கள் உ-ஆம் நாள் பொதுநிலைக்கழக ஆசிரியர் மறைமலையடிகளுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுற்றமைக்கு, இத்தென்றமிழ் நாட்டின் பற்பல இடங்களிலும் உள்ள அன்பர்கள் தாமாகவும் அவைகள் கூட்டியும் அடிகள் செந்தமிழ்மொழிக்குஞ் சைவசித்தாந்தத்திற்கும் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளைப் பாராட்டிப்பேசி, அவர்கள் இன்னும் நன்கினிது நீடுவாழ்கவென்று கடிதம் வாயிலாகவுங் கம்பிவாயிலாகவும் வாழ்த்துரை விடுத்தனர்; பலர் புதினத்தாள்களில் உரையிலும் பாவிலும் அடிகளை வாழ்த்தி எழுதினர். சில முதன்மையான ஊர்களிலிருக்கும் மெய்யன்பர் வேறு சிலர் வெறும் வாழ்த்துரைமட்டும் விடுப்பதில் மனவமைதி பெறாராய்த், தம் நண்பர்கள்பால் தம்மால் இயன்றவளவு பொருள்திரட்டி அடிகளுக்குக் காணிக்கையாக அன்புடன் அனுப்பிவைத்தனர். அங்ஙனங் காணிக்கை அனுப்பியவரிற் சிலர், தாம் சிறிதுமுன்னரே தெரிந்து நன்கு முயன்றிருந்தால் பெரும்பொருள் திரட்டித்தருதற்கு இடம் வாய்த்திருக்குமென்றுந், தாம் பெரிதுமுயலாமலிருக்க அவ்வவர் தாந்தாமாகவே மனம் உவந்தளித்த பொருளையே இப்போது சேர்த்தனுப்பலாயிற்றென்றும் அடிகட்கு வரைந்துதெரிவித்தனர். கடிதங்கள், கம்பிகள், புதினத்தாள்கள் வாயிலாக அடிகளை வாழ்த்திய அவ்வன்பர்கள் எல்லார்க்கும், வாழ்த்துரையொடு காணிக்கையுஞ்சேர்த்து அடிகட்கு அனுப்பிய மெய்யன்பர்க்கும் அடிகள் தமது நன்றியை அறிவிப்பதுடன், அவர்களெல்லாரும் எல்லா நலங்களும்வாய்ந்து நீடினிதுவாழ்கவென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வழுத்துவதுஞ் செய்கின்றார்கள்.

இனி, அடிகளின் அறுதாம் ஆண்டு நிறைவை யாங்கள் தெரிவியாததற்குக் காரணம் வருமாறு: பல ஊர்களிலும், பலநாடுகளிலும் இருந்து அடிகளின் அருந்தமிழ்நூல்களையும் ஆங்கிலநூல்களையுங் கற்றுப் பெரும்பயன் அடைந்த அன்பர்களும், அடிகள் ஆங்காங்கு நிகழ்த்திய விரிவுரைகளைக்கேட்டு அறிவு விளங்கி அகம்மகிழ்ந்தவர்களும், அடிகளின் அறுபதாம் ஆண்டு நிறைவுக்குப், பலவூர்களிலும் ஒரு பெருவிழாக்கொண்டாட விரும்பி, அடிகள் பிறந்தநாளைத் தெரிவிக்கும்படி எம்மைக் கேட்டதொடு, பல்லாவரத்தில் எமது நிலையத்தின்கண்ணும் அந் நாளில் விழாக்கொண்டாட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். அதற்கிணங்கி எம் அருமை மைத்துனர் வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை யவர்களும், என் தம்பிமாரும் யானும், அவ்வெல்லாருடைய கருத்தையும் எம் அருமைத் தந்தையாராகிய அடிகளுக்குத் தெரிவித்து, அவர்களது உடன்பாடு வேண்டினேம். அடிகள் அதற்கு உடன் படாமல், தாஞ்செய்த சிறுத்தொண்டினைத் தம்மவரே பாராட்டித் தாமிருக்கும் இடத்தில் விழாக்கொண்டாடும்படி விடுவது தற்புகழ்ச்சியும் இறுமாப்புமாய் முடியுமாதலால் அங்ஙனஞ் செய்தல் ஆகாதெனவுந், தாஞ்செய்துவருஞ் சிறுத்தொண்டால் தமிழ்மக்கள் எந்தவகையிலேனும் நன்மையடைந்திருந்தால் அவர்களே அது செய்தல் வேண்டுமெனவும், ஆங்காங்குள்ள அன்பர்கள் அங்ஙனம் விழாக்கொண்டாட ஏற்பாடுசெய்வரேல் அதில் நாங்கள் சிறிதுங் கலந்துகொள்ளுதலாகாதெனவும் வலியுறுத்திச் சொல்லி எங்களைத் தடைசெய்துவிட்டார்கள். இங்ஙனந் தடைசெய்ததில் அடிகளின் கருத்து யாதென்றால், ஒருவர் தாம் மக்கள் முன்னேற்றத்திற்கென்று செய்யும் நன்மையை ஆரவாரமின்றி அமைதியாய்ச் செய்து ஒழுகவேண்டுமேயல்லாமல், தமது நலத்தையேனுந் தமது புகழ்ச்சியையேனுங் கருதிச்செய்தல் ஆகாதென்பதேயாம். ஆகவே, யாங்கள் அதற்காக எதொரு முயற்சியும் எடாமல் வாளா இருந்துவிட்டேம். அடிகளுந் தமது அறுபதாம் ஆண்டு நிறைவு எவர்க்குந் தெரியாமலே செல்லல் வேண்டுமென மிக விரும்பினார்கள். ஆனால், எல்லாம்வல்ல இறைவன் திருவுள்ளம் வேறாய்

ஓம்

# முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர்

# ANCIENT AND MODERN TAMIL POETS

By

இது

பல்லாவரம்

பொதுநிலைக் கழக ஆசிரியர்

மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம்

SWAMI VEDACHALAM

என்னும்

மறைமலையடிகளால்

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

**Pallavaram**

*பொதுநிலைக்கழக நிலையத்திலுள்ள*

*திருமுருகன் அச்சுக்கூடத்தில்*

**T. M. Press,**

*பதிப்பிக்கப்பட்டது*

September 3rd, 1936

*All Rights Reserved*

## முகவுரை

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௪, வைகாசித்திங்கள், ௨௯-ஆம நாள் திருநெல்வேலி மாநகரிற் கூடிய **சென்னை மாகாணத் தமிழர்மாநாட்டின் புலவர்பேரவையில்** யாம் அவைத்தலைவராய் நின்று நிகழ்த்திய சொற்பொழிவையே பின்னர் மிக விரித்தெழுதி **முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர்** என்னும் இந்நூலாக வெளியிடலானேம். இடையிடையே வெளியூர்களிற்கூடும் அவைகளை நடத்துதற்குப் போய்வந்தமையாலுஞ், செந்தமிழ் மொழியிலுஞ் சைவசித்தாந்தத்திலும் பொதிந்துகிடக்கும்அரும்பெரும்பொருள்களை இவ்வுலகமெங்கணுமுள்ள அறிஞர்கள் தெரிந்து நலம்பெறல்வேண்டி அவையிற்றை யாம் ஆங்கிலமொழியில் எழுதி இரண்டுதிங்கட்கு ஒருகால் ஒருவெளியீடாகச் சென்ற ஒன்றரையாண்டுகளாக வெளியிட்டுவருதலாலும், இவற்றிடையே எம்முடைய பல புதியதமிழ்நூல்களையுஞ் செலவாய்ப்போன பல பழையதமிழ் நூல்களையும் அச்சிடுவித்துவருதலாலும், இவற்றின்பொருட்டு இரவுபகல் ஓவாது பற்பலநூல்களை ஆராய்ந்து வருதலாலும், பலதிறத்தவான இந்நன்முயற்சிகளினூடே உடம்புநலங் குன்றிப் பின்னரது முன்போல் மீண்டு நன்றாதற்குப் பலநாட்கள் கழிதலாலும், இந்நூல் இடையிடையே விட்டுவிட்டெழுதி முடிவுபெறுதற்கு இரண்டாண்டுகளும் மூன்று திங்களும் ஆயின.

முற்காலத்துவிளங்கிய செந்தமிழ் நல்லிசைப்புலவர்கள் தமதருமைச் செந்தமிழ்மொழியைத் தம் இன்னுயிரினும் விழுமிதாக ஓம்பிப், பொய்சிறிதுங் கலவா அறவுரையே பகருந் தமது நாவால் மெய்ப்பொருள்களையே நிரப்பிய பாக்களும் நூல்களும் அதன்கண் இயற்றி, அதனை மேன்மேல் உரம்பெற வளர்த்துவந்தனர். அதனால் அஃது அஞ்ஞான்று பலையேல் ஏற்றிய நந்தாமணி விளக்குப்போல், தனது பொங்குபேரொளியை எங்கணும்வீசி, இவ்வுலகின்கண்ணிருந்த மாந்தரெல்லாருடைய அறிவுக்கண்ணையும் விளங்கவிளக்கிற்று. மற்றுப் பிற்

காலத்தே, அதாவது சென்ற அறுநூறு ஆண்டுகளாகத், தோன்றிய தமிழ்ப்புலவர்களோ பெரும்பாலுந் தம்முன்னோர் சென்ற நெறியே தேர்ந்துசெல்லாதவர்களாய், அவர்சென்ற மெய்ந்நெறி பிழைத்துப், பொய்ந்நெறி வகித் தமதருமைச் செந்தமிழ் மொழியின் தூய்மையை ஓம்பாது, அதனைப் பிறமொழிச் சொற்களொடுகலந்து மாசுபடுத்தியதல்லாமலும், அதன்கண் மெய்யல்லாதனவும் முழுப்பொய்யும் மிடைந்த பாவும் நூலும் இயற்றி அதன்மெய்வழக்கினையும் பாழ்படுத்திவிட்டனர். அவ்விருதிறமும் பிரிந்து நனிவிளங்க விளக்கிக்காட்டினாலன்றி, இனித் தமிழ்கற்பார் தமிழ்மொழியினையும் அதனை வழங்கும் மக்களையும் பேணி வளம்படுத்தாரெனக் கருதியே இந்நூலை இயற்றலானேம். இதனைப்பயில்வார் பண்டைத்தமிழ் நல்லிசைப்புலவரின் அளக்கொணாமாட்சியும் மெய்வழக்கும் நன்கறிந்து, அவர் ஒழுகிய மெய்யொழுக்கத்தையே கடைப்பிடித்துத், தாம் மிக்குயர்வதொடு, தமிழையுந் தமிழ்மக்களையும் மிக்குயரச்செய்வார்களாக!

பல்லாவரம்,
பொதுநிலைக்கழகநிலையம்,
திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௭,
ஆவணி, ௧௫.

**மறைமலையடிகள்.**

ஓம்

# சிவஞானபோத ஆராய்ச்சி

## முதல் இயல்

### சைவசித்தாந்த நூல்கள்

#### திருவுந்தியார்

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு. அப்பதினான்கில் திருவுந்தியார் என்னும் நூலை அருளிச்செய்தவர் உய்யவந்த தேவநாயனாரென்பது அத்திருவுந்தியாரின் இறுதிக்கண் உள்ள

> **"வையம் முழுதும் மலக்கயங் கண்டிடும்**
> **உய்யவந்தானுரை"**

என்னுஞ்செய்யுளாலும், இவர் இருந்தவூர் திருவியலூர் என்பது, இவர்தமக்கு மாணாக்கருந் **திருக்களிற்றுப்படியார்** என்னும் நூலை அருளிச் செய்தவருமான தென்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் தாம் அருளிச்செய்த அத்திருக்களிற்றுப்படியார் ௬௯-ஆஞ்செய்யுளில்

> **"திருவியலூர் ஆளுஞ் சிவயோகி இன்றென்**
> **வருவினையை மாற்றினான் வந்து"**

என அருளிச்செய்திருக்கும் வரலாற்றுக் குறிப்பினாலும் நன்குபுலனாம். திருவுந்தியார் அருளிச்செய்த ஆசிரியர் பெயரும் உய்யவந்ததேவநாயனார் என்பதே யாகுமென இங்ஙனந் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கவுஞ், "சிவஞானபோத வசனாலங்காரதீப" நூல் இயற்றியவர் அவர் பெயரை "ஆளவந்ததேவநாயனார்" எனமாற்றிப் பிழைபட வரைந்திட்டார். ஆசிரியர் மாணாக்கர் இருவர்க்கும் 'உய்ய வந்ததேவநாயனார்' எனப் பெயரிருத்தல் கண்டு, ஆசிரியர் பெயரை அங்ஙனம் மாற்றி அவர் பிழைசெய்தார் போலும்!

### திருக்களிற்றுப்படியார்

இனித், **திருக்களிற்றுப்படியார்** என்னும் நூலை ஆக்கியருளினவர் பெயரும் **உய்யவந்ததேவநாயனார்** என்பதேயாதலும், ஆயினும் இவர் இருந்தவூர் 'தென்கடவூர்' எனப் பிறிதொன்றாதலும் இந்நூலுக்குரைசெய்த **சிவப்பிரகாசரைக்** கூறுஞ்,

> ''சேடன் படிபுரக்குக் தென்கடவூர் உய்யவந்தான்
> பாடுங் களிற்றுப் படிதனக்கு—நீடிமையோர்
> தேடுபுகழ்ச் செஞ்சொற் சிவப்பிரகா சன்றிருந்த
> நாடியுரை நாடா நயந்து''

என்னும் உரைப்பாயிரச் செய்யுளானே தெற்றெனப் பெறப்படுதல் காண்க.

திருக்களிற்றுப்படியார் இயற்றிய உய்யவந்ததேவநாயனார், தாம் இயற்றிய இந்நூலின் வெண்பாக்களில், திருவுந்தியாரிலுள்ள செய்யுட்களை எடுத்து இடையிடையே பிணைத்து நூலருளிச்செய்திருத்தலை உற்றுநோக்குங்கால், இவர்தமக்கு மெய்ப்பொருள் அறிவுறுத்திய ஆசிரியன்றன் மெய்ம்மொழிகளைத் தமது நூலுட் பொன்னேபோற் பொதிந்துவைக்கும் விழைவு பெரிதுடையராயிருந்த குறிப்புப் புலனாகாதொழியாது. ஆகவே, திருவுந்தியார் அருளிச்செய்த திருவிசலூர் உய்யவந்ததேவநாயனாரே, திருக்களிற்றுப்படியார் ஆக்கிய தென்கடவூர் உய்யவந்ததேவ நாயனார்க்கு ஆசிரியராதல் நன்கு துணியப்படும். இதற்கு மாறாக, இவ்வாசிரியர் இருவர்க்கும் இடையே திருவிசலூர் ஆளுடையதேவநாயனார் அல்லது ஆளவந்த தேவநாயனார் என்பவர் ஒருவர் இருந்தாரெனவும், அவரே தாம் முதல் உய்யவந்ததேவநாயனார்பாற் கேட்டறிந்த மெய்ப்பொருளை இரண்டாம் உய்யவந்ததேவநாயனார்க்கு அறிவுறுத்தருளினாரெனவுஞ் சிலர் கட்டிவைத்த கதைக்கு யாம் சான்றேதுங் காண்கிலம்.



### இவ்விருநூல்களின் காலம்

இனித், 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னும் இவ்விரு நூல்களின் ஆசிரியர்கள் **சிவஞானபோதம்** இயற்றியருளின ஆசிரியர் மெய்கண்டதேவர்க்கும், அவர் மாணாக்கர் அருணந்திசிவனார்க்கும், அவர் வழிவந்த உமாபதிசிவனார் முதலாயினார்க்கும் முற்பட்டவராதல் ஆராய்ச்சியாற் புலனாகின்றது. மெய்கண்டதேவர் மாணாக்கர்களும், அம்மெய்கண்டதேவர் வழிப்போந்த ஏனையாசிரியன்மாரெல்லாருந் தம் நூல்களுள் மெய்கண்டதேவரைக் குறித்துச்சொல்லி, அவரைப்போற்றுங் கடப்பாடு மேற்கொண்டவராகவே காணப்படுகின்றனர். அது,

> ''பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
> பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
> கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
> கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
> விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய்மேவு
> மெய்கண்டதேவன்மிகு சைவ நாதன்
> புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
> பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்''

என்று **சிவஞானசித்தியார் பரபக்கத்தும்,**

> ''என்னைப் பவத்திற் சேரா வகையெடுத் தென்
> சித்தத்தே, தன்னைவைத் தருளினாலே தாளிணை
> தலைமேற் சூட்டு, மின்னமர் பொழில்சூழ் வெண்
> ணெய் மேவிவாழ் மெய்கண்டான் நூல், சென்னி
> யிற் கொண்டுசைவத் திறத்தினைத் தெரிக்கலுற்
> றாம்''

என்று அதன் பரபக்கத்தும் **ஆசிரியர் அருணந்திசிவனார்** கூறுமாற்றானும், மெய்க்கண்டதேவர்க்கு மற்றொரு மாணவரான **திருவதிகை மனவாசகங் கடந்தார்** தாம் அருளிச்செய்த **உண்மை விளக்கம்** என்னும் நூன்முகத்திற்,

"பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந் தப்
பொருளா, மெய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்
பம்=பொய்காட்டா, மெய்யா திருவெண்ணெய்
வித்தகா சுத்தவினு, வையாகீ தான்கேட் டருள்"

என்று நுவலுமாற்றானும், அவர் மாணவர் மரபில் வந்தவரான உமாபதிசிவனார் தாம் இயற்றியருளிய சிவப்பிரகாசம் என்னும் நூலின் பாயிரத்திற் ரும் வந்த ஆசிரியர் மரபு கூறுவான் புகுந்து,

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவிய சத்தியஞான தரிசனிகளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாவெண்ணெய்,
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறு,
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருள் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மையோரே"

எனப்பகருமாற்றானும், இவ்வாசிரியமரபில் உமாபதிசிவனார்க்குப் பின்னேபோந்த சீகாழிச் சிற்றம்பலநாடிகளுந் தாம் அருளிச்செய்த துகளறுபோதம் என்னும் நூன் முகத்திற்,

"பதிபசு பாசந் தெரிந்தந்தப் பாச
விதிவிழியை வென்றதனின் வேறாங்-கதிவழங்கு
மெய்கண்டான் சந்தான மேவிற் சிவானந்தங்
கைகண்டார் காணர் கரு"

எனத் தாம் மெய்கண்டதேவர் மரபில் வந்தமை தெளியப் புகலுமாற்றானும் நன்கு விளங்காநிற்கும். எனவே, மெய்கண்டதேவர் மரபில் வந்தா ரெல்லாருந் தாம் அம்மரபில் வந்த வரலாற்றினை ஐயுறுதற் கிடனின்றித் தெற்றெனக் கிளந்து சொற்றமைபோலத், 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னும் நூல்களை ஆக்கிய ஆசிரியரிருவரும் அம் மெய்கண்டமரபினைச் சுட்டிக் குறிப்பாலேனும்



வெளிப்படையாலேனும் ஏதும் உரைப்பக் காணாமையின், அவரிருவரும் மெய்கண்டதேவநாயனார்க்கு முன்னிருந்தோராதல் நன்கு துணியப்படும்.

அற்றேல், உய்யவந்ததேவர் எனப்பெயரிய அவ்வாசிரியர் இருவரும் மெய்கண்டதேவர்க்கு எத்துணை காலம் முற்பட்டவரெனிற், காட்டுதும். இரண்டாம் உய்யவந்ததேவர் தாம் அருளிச்செய்த 'திருக்களிற்றுப்படியா'ரில்,

"மோகம் அறுத்திடுல்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத்=தோகை
யர்பாற், றூதாகப் போகவிடும் வன்றொண்டன்
றொண்டுதனை, ஏதாகச் சொல்வே னியான்"

எனப்போந்த செய்யுளிற் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கூறியிருத்தலின், இவர் சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பின்னர் ஒருகாலத்தே யிருந்தவரென்பது இனிது விளங்கற்பாலதேயாம்.

இனிச், சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பின்னும் மெய்கண்டதேவர்க்கு முன்னுஞ் சென்ற காலத்தில் எதன்கண்ணே உய்யவந்ததேவநாயனார் இருந்தா ரென்பதூஉஞ் சிறிது ஆராய்ந்து காட்டுவாம். திருக்களிற்றுப் படியாரின் ௫௰-ஆஞ் செய்யுளாகிய,

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க=அவிழ்ந்த சடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்"

என்பதன்கட், 'சேந்தனார்' என்னும் அடியவர் தாம் வழக்கமாய்ச் சிவனடியார்க்கு அளித்துவந்த சோற்றுணை அளிக்கப் பொருளில்லாமல் ஒருகால் மிக்க வறுமை எய்தி வருந்திய வழியுந், தாஞ் செய்துபோந்த அவ்வறத்தின் வழுவாராய்த், தங் கையிற் கிடைத்த சிறுகாசு கொண்டு களியுணவு சமைத்து, அதனைப் படைத்தற்குச் சிவனடியாரைத்

கேட்டச், சிவபிரானே ஓர் அடியவர் வடிவிற் போந்து அக் கனியமுதினைப் பெற்றுண்டு மறைந்ததாகிய நிகழ்ச்சியினைக் குறித்திருத்தலால் இவர் சேந்தனார் காலத்திற்குப் பிற்பட்டவராதல் பெறப்படும்.

இனி, இங்ஙனம் இவராற் குறிப்பிடப்பட்ட சேந்தனார் என்னும் அடியவர் பட்டினத்தடிகளுக்கு மாணாக்கரென்பது, அடிகள் துறவு பூண்டபின், அவரது பெரும் பொருளைக் கவர்தற்பொருட்டு அஞ்ஞான்றிருந்த அரசன், அடிகளின் பொருளைக் காத்துநின்ற சேந்தனாரைச் சிறையிலிட்டு வருத்தாநிற்பச், சேந்தனாரின் மனைவியாரும் மகனாரும் அக் கொடுமையினைப் பட்டினத்தடிகள்பாற் சென்று தெரிவித்து முறையிட, அடிகள்,

**"மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மன்னினானும், நித்தலுந் தேடிக்காணா நிமலனே அமலமூர்த்தி, செய்த்தலை கயல் பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட, கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே"**

என்னுஞ் செய்யுளால் இறைவனை வேண்டிப் பாடச், சேந்தனார் உடனே சிறையினின்றும் விடுவிக்கப்பட்டு அடிகளால் உய்க்கப்பட்டனர் என வழங்கும் வரலாற்றினாற்றெளியக் கிடக்கின்றது. இச்சேந்தனார் அருளிச்செய்த "திருவிசைப்பா," "திருப்பல்லாண்டு" என்னுமிரண்டும், பட்டினத்தடிகள் அருளிச்செய்த "திருக் கழுமல மும்மணிக் கோவை," "திருவிடை மருதூர் மும்மணிக்கோவை," "திருவேகம்பமுடையார் திருவந்தாதி," "திருவொற்றியூர் ஒருபா ஒருபது" என்னும் நான்குஞ் சைவத் திருமுறைகள் பதினொன்றில், முறையே ஒன்பதாந் திருமுறை, பதினோராந் திருமுறைகளில் நம்பியாண்டார் நம்பி என்பவராற் கோக்கப்பட்டிருத்தலின், பட்டினத்தடிகளும் அவர்தம் மாணாக்கராகக் கருதப்படுஞ் சேந்தனாரும் நம்பியாண்டார் நம்பிகளுக்குமுன் னிருந்தவராதல் துணியப்படும். நம்பியாண்டார் நம்பிகள் காலம் இற்றைக்கு எண்ணூற்றைம்பது ஆண்டுகட்கு முற்பட்டதாகலின், அவர்க்குமுன்னிருந்த பட்டினத்தடிகளும் அவர்தம் மாணவரான சேந்தனாருஞ் சிறிதேறக்குறைய ஆயிர ஆண்டுகட்கு முன்னே யிருந்தவராதல் தானே போதரும். என்றாலும், பட்டினத்தடிகள் இருந்த காலஞ் சுந்தரமூர்த்திகள் காலத்திற்கும் பிற்பட்டதென்பது,



திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் (௨௮),

**"வித்தகப்பாடல் முத்திறத் தடியருந்**
**திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்"**

என்று பட்டினத்தடிகளே கூறுமாற்றால் விளங்கும்.

இனி, உய்யவந்ததேவநாயனார்க்குப் பின்னேயிருந்த மெய்கண்டதேவர் காலமுஞ் சிறிது ஆராயற்பாற்று. மெய்கண்டதேவர் மரபில் நாலாமவராய்த் தோன்றிய உமாபதி சிவனார் தாம் அருளிச்செய்த 'சங்கற்ப நிராகரணத்'தில்,

**"ஏழுஞ் சிருநூ றெடுத்த வாயிரம்**
**வாழுநற் சகன மருவாநிற்ப"**

எனச் சாலிவாகன ஆண்டு க௨௩௫-இல் தில்லைப்பொன்னம்பலத்தை யடுத்ததொரு மண்டபத்தே குழுமிய பல சமய ஆசிரியர் ஒருவரையொருவர் மறுத்துக்கூறிய கோள்களையெல்லா மெடுத்தியம்பி அவற்றின் பொய்ம்மை தேற்றுதற்கே இந்நூல் இயற்றலாயிற்று என இந்நூல் வரலாறு கூறுமுகத்தால் இந்நூலியற்றிய காலமும் இந்நூற்பாயிரத்தே தனெடுத்து மொழிதலால், இவர்தாம் இருந்தகாலம் இற்றைக்கு ௬௨௩-ஆண்டுகளுக்கு முன்னென்பது இனிது விளங்காநிற்கும்.

இனி, உமாபதிசிவனார்க்குமுன், அவர்தம் ஆசிரியர் மறைஞான சம்பந்தரும், அவர்க்குமுன் அவர்தம் ஆசிரியர் அருணந்திசிவனாரும், அவர்க்குமுன் அவர்தம்மாசிரியர் மெய்கண்டதேவரும் இருந்தாரென்பதனால், உமாபதிசிவனார்க்கும் மெய்கண்டதேவர்க்கும் இடையே குறைந்தபடி ௮௦-ஆண்டுகளாதல் சென்றனவாகக் கோடல்வேண்டும்.

அங்ஙனங் கொள்ளவே, மெய்கண்டதேவர் இற்றைக்கு எOO ஆண்டுகட்கு முன்னிருந்தாரென்பது முடிக்கப்படும். இதுவே அவரிருந்த காலமென்பதற்குத், திருவண்ணாமலைக் கோயிலில் மெய்கண்டதேவரார்ற் பொறிப்பிக்கப்பட்ட ஒரு கல்வெட்டின் காலஞ் சாலிவாகன ஆண்டு ககருச-என்று காணப்பட்டிருப்பதும் ஒரு சிறந்த சான்றாகும்* என்க.

எனவே, இற்றைக்கு எOO-ஆண்டுகட்கு முன்னிருந்த மெய்கண்டதேவர்க்கும், இற்றைக்கு ஆயிர ஆண்டுகட்கு முன்னிருந்தசேந்தனார்க்கும் இடைப்பட்டதொருகாலத்தே தென்கடவூர் உய்யவந்ததேவ நாயனாரும், அவர்தம் ஆசிரியர் திருவிசலூரார் உய்யவந்ததேவ நாயனாரும் இருந்தாராதற் பாலார். அக்காலந்தான் யாதோவெனின்; சேக்கிழார் பெருமான் அரிவாட்டாயனார் புராணத்திற்

> ''காட்டிய நெறியின் உள்ளந் தண்டறக் கழுத்தி
> னோடே, ஊட்டியும் அரியா நின்றார் உறுபிறப்
> பரிவாரொத்தார்''

எனக்கூறிய செய்யுட்கணுள்ள 'ஊட்டியரிதல்' என்னுஞ் சொற்றொடரைத் திருக்களிற்றுப்படியாரில் (கக), ''ஊட்டியறுத்தவற்கே ஊட்டியறுத்தவரை'' என உய்யவந்ததேவ நாயனார் எடுத்தாண்டிருத்தலின் இவரும் இவராசிரியருஞ் சேக்கிழார்க்குச் சிறிது பின்னே யிருந்தமை திண்ணமா மென்க.

இவ்வாற்றால், 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னுஞ் சைவசித்தாந்த நூல்கள் இரண்டனையும் அருளிச்செய்த உய்யவந்ததேவநாயனார் இருவரும் இற்றைக்கு எருO-ஆண்டுகட்கு முன்னே இருந்தாரெனக் கோடல் இழுக்காது. இங்ஙனம் இவ்விருவரும் மெய்கண்டதேவர்க்கு முன்னிருந்து, அவர் 'சிவஞானபோதம்' இயற்றுதற்கு முன்னரே 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்'

* செந்தமிழ், தொகுதி ந, பக்கம் கஅக.



என்னும் நூல்களை ஆக்கியிருத்தல் கண்டு போனுஞ், சித்தாந்தநூல்கள் பதினான்கனையுந் தொகுத்துக்கூறும்,

> ''உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம்=வந்தஅருட்
> பண்பு வினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்ப முற்று''

என்னும் பழையவொரு வெண்பாச்செய்யுள், முதலிலே 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னும் நூல்களையும், அவற்றின்பிற் சிவஞானசித்தியார் முதலான ஏனைப் பன்னிரண்டு நூல்களையும் அடைவே வைத்தோதுவதாயிற்று. என்றிதுகாறும் ஆராய்ந்துரைத்தவாற்றால், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு நூல்களுமே, சைவசித்தாந்த நூல்கள் பதினான்கனுள் மிகப்பழையனவாய் நிற்றல் தெளியப்படுமென்பது.

## சிவஞானபோதம்

இனிச், சைவசித்தாந்த நூல்களில் மேற்கிளந்த திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இருநூல்களும், பிறவித்துன்பத்தை நீக்கி உயிர்கள் இறைவன் திருவடியைத் தலைக்கூடிப் பேரின்பப்பேற்றினை அடைதல்வேண்டுமெனவும், அங்ஙனம் அவை அதனை அடைதற்குரிய தவமுயற்சி இத்தகையதாதல் வேண்டுமெனவும் வற்புறுத்தி, அதனை அடைந்தார் நிலை இவ்வியல்பிற்றுமென விளக்குந் திறத்தவாகும்.

மற்று, இவையிரண்டற்கும் பின்னெழுந்த **சிவஞானபோதமோ**, காணப்பட்ட இவ்வுலகினைக்கொண்டு காணப்படாத கடவுளொன் றுண்டெனவும், அதுதான் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைப் புரிவதாமெனவும், அழித்தற்றொழிலை இயற்றுவதே ஏனை யிரண்டு தொழில்களையும் இயற்ற வல்லதாமெனவும், அம்முழுமுதலறிவுப் பொருடான் உலகுயிர்களிற் பிரிவற நிறைந்து நின்று அம்முத்தொழில்களை உயிர்களின் அறிவு விளக்க

இன்பப்பேற்றின் பொருட்டு நிகழ்த்தா நிற்குமெனவும், உடலின் வேறாக உயிர் என்பதொரு பொருள் உண்டெனவும், அவ்வுயிர்தாமும் ஒன்றாகாமற் பலவாய்ப் பலவேறு தன்மைகள் வாய்ந்தனவாய் என்றுந் தம்முதல் அழியாமல் இருக்குமெனவும், அவ்வுயிர்களெல்லாந் தொன்று தொட்டே ஆணவம் எனப்படும் ஓரிருளால் தம் விழை வறிவு செயல்கள் மறைக்கப்பட்டு நிற்றலின் அவ்விருள் நீக்கத்தின் பொருட்டு இறைவனாற் படைத்துக் கொடுக்கப்பட்ட இப் பல்வேறுடம்புகளைக் கருவியாய்க் கொண்டே அவ் விழை வறிவு செயல்கள் விளங்கப் பெற்று வருகின்றனவெனவும், உயிரின் சேர்க்கையாலன்றி ஐம்பொறி யுணர்வுகள் இயங்காமைபோல இறைவன் சேர்க்கையாலன்றி உயிர்கட்கு விழை வறிவு செயல்கள் விளங்காவெனவும், மக்கள் தமது சிற்றறிவாற் சுட்டியறிவன வெல்லாம் 'அசத்து' என்னும் பெயர்க்குரியனவாயும் மனமொழிகளுக்கு எட்டா நிலையில் இறைவனதருள் வயமாய் நின்று உணரப்படும் ஒரு முழுமுதற்பொருள் 'சிவசத்து' என்னும் பெயர்க்குரியதாயும் நிற்குமெனவும், அங்ஙனஞ் சத்தாகிய சிவத்தினெதிரே அசத்தாகிய பொருள்கள் விளங்க மாட்டாவாகலிற் சத்தாய் அவற்றுள் நிறைந்து நிற்குஞ் சிவம் அவையிற்றைத் தன்னின் வேறாய்க்காணாது, அசத்தாம் பொருள்கட்கு உணர்வு இன்மையின் அவைதாமுஞ் சிவத்தைக் காணாது, மற்று அசத்தையுஞ் சத்தையுங் காண்டற்கியைந்த சத்தாந்தன்மையும் அசத்தாந்தன்மையுந் தங்கண் ஒருங்குடைய உயிர்களே (ஆன்மாக்களே) அவ்விரண்டனையும் உணருந் தன்மையவாகலின் அதுபற்றி அவை 'சதசத்து' என்று வழங்கப்படுமெனவும், இவ்வியல்புகளெல்லாம் அறியமாட்டாது ஐம்புல அவாக்களால் ஈர்ப்புண்டு தானோர் அறிவுப்பொருளென்பதூஉம் உணராது மயங்கிவருந்தும் உயிர்களுக்கு, அவ்வுயிர்களுள் உயிராய் மறைந்துநின்று அருள்புரிந்துவரும் முதல்வனே இரக்கமிகுதியாற் குருவடிவிற்போந்து அவ்



வியல்புகளை யுணர்த்த அதனான் மெய்யுணர்வு தோன்றப் பெற்று அவ்வுயிர்கள் இறைவன் றிருவடியினை ஒருங்குதலைக்கூடுமெனவும், அறிவில் பொருள்களிற் பழகிய பழக்கத்தாற் றோன்றிய அறிவாலும் உயிர்கள் தமக்கெனவுள்ள சுட்டறிவாலும் இறைவனை அறிதல் செல்லாமையால் இறைவனது அருளறிவு ஒன்றுகொண்டே அவை இறைவனை யுணர்ந்து அவ்வுணர்ச்சி பின்னர் அறியாமையாற் பற்றப்படாமைப் பொருட்டு 'ஓம்சிவம்' எனும் ஐந்தெழுத்தை இடையறாது நினைவிற் பதித்தல் வேண்டுமெனவும், இறைவன் உயிர்களிற் பிரிவின்றி நிற்றல்போல உயிர்களும் இறைவனை விட்டுப் பிறிதொன்றனை நினையாத நிலையில் உறைத்துநிற்குமாயின் ஆணவம் மாயை வினையென்னும் மும்மலங்களால் அவை தீண்டப்பெறாவெனவும், பொருள்களைக் காணுங் கண்களுக்கு அவற்றோடுடனாய் நின்று தானுங்கண்டு அவை அவையிற்றைக் காணுமாறுஞ்செய்யும் உயிர்போல இறைவனும் உயிர்களோடுடனாய்நின்று அவை மல மாயை வினைகளைக் காணுமாறுசெய்து தானும் அவற்றைக் காண்பனாகலின் இங்ஙனந் தன்னோடுடனாய் நின்று காட்டிக் காணும் இறைவன்றன் அருளுதவியினை நினைந்துநினைந் துருகும் உயிர் அவன்றிருவடியில் ஒன்றி ஒன்றறக்கலத்தல் ஒருதலையாமெனவும், இறைவன் றிருவடிப்போதுகளை உயிர்கள் சேரவொட்டாது தடைசெய்யும் மல மாயை வினைகளை மேற்காட்டிய முறையிற் கடைப்பிடியாய் நின்று பழகுமாற்றாற் சுவடறக் கழுவிச் சிவநேய முடையாருடன் கொண்ட இடையறாச் சேர்க்கையால் அவை மீண்டுந் தம்மைப் பற்றாமற்செய்து சிவம் விளங்கித்தோன்றுஞ் சிவனடியார் வடிவினையுந் திருக்கோயில்களையுஞ் சிவமேயெனக் கருதி வழிபடுதல் இன்றியமையாததாமெனவும் இனிது விளக்குந் தனிப்பெருமாட்சி வாய்ந்ததாகும்.

கடவுள் உயிர் மலம் மாயை வினை வீடுபேறு என்னும் ஆறன் இயல்புகளை அளவையியல் வழா ஆராய்ச்சிமுறை

யில் வைத்து நன்கு விளக்குந் தனி முதல்நூல் சிவஞானபோதத்தைத் தவிர வேறேதும் எங்கும் எந்த மொழியிலும் இல்லை. உலகத்துள்ள நூல்களிற் சில, கடவுளியல்புகளிற் சிலவற்றை மட்டுமே எடுத்தியம்பும்; அச் சிலவற்றுள்ளும் ஒன்று மற்றொன்றனோடு ஒவ்வாமல் இகலும்; அதனால் அந்நூலறிவு கொண்டு இறைவன்றன் உண்மை யியல்புகளை யுள்ளவாறுணர்ந்து அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் இயலாதொழிகின்றன. வேறு சிலநூல்கள் உயிரினியல்புகளை அளந்தறியப் புகுந்து அவற்றின் உண்மை காண மாட்டாமல் அங்ஙனமே ஒன்றனோடொன்று மாறுபடுங் கொள்கைகளை விரித்து வெறியவாயின; அவைதம்மால் உயிரின் உண்மையுணர்தலும் இயலாதொழிகின்றது.

இனி, உயிர்கள் பிறவிகளெடுத் துழலுங் காரணத்தை வேறெந்தநூலுங் கண்டதில்லை; அதனால் ஆணவமலத்தைப் பற்றிய ஆராய்ச்சி சிவஞானபோதத்திற் றவிர உலகத்தின்கணுள்ள நூல்கள் வேறெதன்கண்ணுங் காணப்படுகின்றிலது.

இனி, இவ்வுலகத்திற்கும், இதன்கணுள்ள பொருள்கள் உடம்புகட்கும் முதற் கருவியாய் நிற்கும் மாயையென்னும் முதற் பொருளின் றன்மையினை உள்ளவாறுணர்ந்துரைக்கும் நூலுஞ் சிவஞான போதத்தைத் தவிர வேறெதனையும் யாண்டுங் கண்டிலேம். இம் மாயையின் வழியே உயிர்கள்மாட்டு நிகழும் இருவினை நிகழ்ச்சிகளை முன் பின் முரணுறாமல் ஆராய்ந்து தெற்றெனத்தெரிக்கும் நூலும் இதனையொழிய வேறெதனையுங்காணேம்.

இனி, இவையேயன்றி, உயிர்கள் எய்துதற்குரிய முடிந்தநிலையான வீடுபேற்றின் மெய்ம்மையினை விளங்கத் தேற்றும் விழுமியநூலுஞ் சிவஞானபோதமே யல்லால் வேறேதும் எங்கும் எம்மொழியிலும் இல்லை.

இவ்வாறாக, மக்களுயிர்க் குறுதிபயக்கும் இவ்வறுவகைப்பொருளாராய்ச்சியும் ஒன்றன்பின் ஒன்றாக முறைப்படவைத்து, மெய்ம்மையுணரும் வேட்கைமிக்க நுண்



ணுணர்வினரெல்லாருங் கழிபேருவகை துளும்பித் தெரிந்தேற்க இவ்விழுமிய சிவஞான்போதநூல் உண்மையான் ஆராய்ந்து விளக்கும் வகைகளெல்லாம் பின்னே தொடர்ந்து வரும் விரிவுரையிற் காணப்படும். இத்துணை ஆராய்ச்சிகளையுந் தன்னகத்தேகொண்ட இந்நூல் மிகப்பெரியதோர் அளவினதாய் இருக்கவேண்டுமென இதனைக் கண்டறியாதார் நினைப்பர். ஆனால், இதன் மிகச்சுருங்கிய அளவினைக் கண்டாரோ, ஆ! இத்துணை அரும்பெரும் பொருளும் ஒருங்குதெரிக்கும் இச்சிறியநூல் அளவில் எத்துணைச் சிறியதாயிருக்கின்றதென எண்ணியெண்ணி வியப்புறா நிற்பர்! ஏனெனில், இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் அமைந்திருக்கின்றது; இப்பன்னிரண்டு சூத்திரங்களும் அறுபஃதடிகளையுடையன; இவ்வறுபஃதடிகளிலும் இருநூற்றுப்பதினாறு சொற்களேயுள்ளன. இனி, இப்பன்னிரண்டு சூத்திரப்பொருளை விளக்கும் வெண்பாக்களோ எண்பதேயாகும்; இவ்வெண்பதுவெண்பாக்களும்முந்நூற்றறுபஃதடிகளினால் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகத், தொண்ணூற் றிரண்டு பாக்களிலே, அல்லது நானூற்றிருபஃதடிகளிலே கடவுள் உயிர் மலம் மாயை வினை வீடுபேறு என்னும் அறுவகைப் பொருள்களின் ஆராய்ச்சிகள் அத்துணையும் அடக்கி, அங்ஙனம் அடக்கியவாற்றாற் பொருள்மயங்குதற்குச் சிறிதும் இடனின்றி, அவற்றை அங்கையங்கனியெனத் தெளிய விளக்கி, அவையிற்றின் உண்மையை முடித்துக்காட்டுவதென்றால், ஆ! அஃது ஒப்புயர்வில்லாத் தெய்வஅருள் நிரம்பப்பெற்றார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதின் வாய்க்குமோ? இத்துணைச்சுருங்கிய நூலிலே பரந்து விரிந்தாழ்ந்தபொருட்பரப்பத்துணையுஞ் செறிந்து துலங்கக்கண்டால், அஃதெவர்க்குத்தான் வியப்பினை விளைவியாது!

பண்டைச்செந்தமிழ் நூல்களிலே அறம்பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களின் றன்மைகள் அவ்வளவுந் தெரிந்தெடுத்துக் குயிற்றிய மணிக்கலன் என வயங்

குந் தனிப்பெருமாட்சி வாய்ந்தநூல் திருக்குறள் ஒன்றேயாம். பின்றைச்செந்தமிழ் நூல்களில் அவ்வுறுதிப்பொருள்களை எய்துதற்குரிய உயிர்களினியல்பும், அவை அவையிற்றைப் பெறவொட்டாது தடைசெய்யும் ஆணவமலத்தின் இயல்பும், உயிர்கட்கு அறிவையும் முயற்சியையும் எழுப்புதற்பயத்தவாம் மாயைவினைகளின் இயல்பும், உயிர்களுக்கு மாயையைக்கூட்டி அவ்வாற்றால் அறிவு முயற்சிகளைத் தோற்றுவித்துத் தனது பேரின்பத்தை நுகர்விப்பானை முதல்வன் இயல்பும், வீடுபேற்றின் றன்மையும் வினாவிடையுள்ளுறுத்து விளக்கித் திட்பநுட்பஞ்செறிந்து, திருக்குறளினும் பார்க்கப் பன்மடங்கு சிறந்த மாட்சிமிக்கதாய் நிலவுவது சிவஞானபோதம் ஒன்றேயாம். திருக்குறள் பெரும்பாலும் மக்கள் ஒழுகலாறுகளையே விரித்துரைப்பது; கடவுள் உயிர் மலம் மாயை வினைகளையும் வீடுபேற்றையும் ஆராய்ச்சிமுறையானன்றி இயற்கை முறையான் வைத்துச் சுருக்கிநுவல்வது. திருக்குறட் பயிற்சிகொண்டு இறைவனிருப்பும் இறைவன் பொதுவியல்புகளும் உணரலாகுமேயன்றி, அவன் றன்னை நினைந்துருக அவாவும் அன்பர் பொருட்டு இன்றியமையாது மேற்கொள்ளும் அருளுருவச் சிறப்பியல்பினை உணர்தல் இயலாது; அங்ஙனமே, அதனால் ஏனை உயிர்களின் சிறப்பியல்புகளும், மலமாயை வினை வீடுபேறுகளின் உண்மைத் தன்மைகளும் வெள்ளிடைவிலங்கலென விளங்கவறிந் துறுதிகூடுதல் இயலாது. மற்றுச், சிவஞானபோதநூலிலோ இவ்வியல்புகள் முற்றுமெடுத்துத் தெளித்து விளக்கப்பட்டிருக்கின்றன; திருக்குறளினும் மிகப்பெரிய ஆராய்ச்சிகளை அகத்தடக்கிய இவ்வறிவுப்பெருநூல், அதனினும் அளவிற் பெரியதொன்றாக இருக்கற்பாலதெனினும், இஃது அதனில் ஆறிலொருகூறன் அளவினதாயிருத்தலே பெரியதோர் இறும்பூதினைப் பயவாநிற்கின்றது. திருக்குறள் ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறட்பாக்கள் அல்லது இரண்டாயிரத்து அறுநூற்றறுபஃது அடிகளால்



ஆக்கப்பட்டதொன்றாகும்; மற்றுச், சிவஞானபோதமோ தொண்ணூற்றிரண்டு பாக்கள் அல்லது நானூற்றிருபஃதடிகளான் மட்டுமே அமைக்கப்பட்டதொரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். சிவஞானபோதத்தைப்போற் சொற்சுருங்கியதொரு நூலும், அங்ஙனஞ் சுருங்கிய எல்லையிலே மிக விரிந்தாழ்ந்த பொருட்பரப்பெல்லாம் அகத்தடக்கியதொரு நூலும் இந்நிலவுலகத்துள்ள எந்த மொழியிலும் இல்லையென்பது திண்ணம்.

இன்னுஞ் சொற்சுருங்க நூலியற்றுதல் அரிதேயாயினும், அங்ஙனம் இயற்றும்நூலிற் றான்கூறக்கருதிய அரும்பொருளெல்லாம் ஒருங்குசெறித்து அவற்றை நன்கினிது விளங்கவைத்தல் எவர்க்கும் அரிதரிது. வடமொழியிற் சொற்சுருங்க அமைக்கப்பட்ட 'சாங்கியம்,' 'யோகம்,' 'வைசேடிகம்,' 'நையாயிகம்,' 'மீமாஞ்சை,' 'வேதாந்தம்' முதலானநூல்கள் பலவுள. என்றாலும், அந்நூற்பொருள்கள் அந்நூற்சூத்திரயாப்புகளால் நன்கு விளங்குதலில்லை. அதனால், அவையிற்றுக்கு உரைகாணப்புகும் ஆசிரியர் தம்முள் ஒருவரோடொருவர் மிகஇகலியிடும் பூசலுக்கும் ஓர் அளவையில்லை. அங்ஙனஞ் சூத்திரப்பொருடுணிதற்குப் பெரும்பாலும் இடனும் வாயிலும் இன்றிச் சொற்சுருங்க இயற்றப்பட்ட வடமொழி நூல்களையொப்பன தமிழ்மொழியில் ஒருசிலதாமும் இல்லை. தமிழ் இலக்கணஇலக்கிய அறிவுவாய்ந்தாரெவருந் 'திருக்குறள்,' 'சிவஞானபோதம்' என்னும் நூல்களுக்கு உரையுதவியில்லாமலே பொருடெரிந்துகோடல் இயலும். மற்று, மேற்கூறிய வடமொழிச் சுருக்கநூல்களோ, தம்மை யியற்றிய ஆசிரியரே தம்மாணாக்கர்க்குத் தம் பொருளை அறிவுறுக்க, அம்மாணாக்கர் அப்பொருளைத் தம்மாணாக்கர்க்கு அறிவுறுக்க, இங்ஙனமாக அவ்வாசிரியர்தம் மாணாக்கர் வழியில் வந்தார் வகுத்த உரையுளவாயின், தம்பொருளை உள்ளவாறறிவிக்குமே யன்றி, அங்ஙனம் அவ்வாசிரிய மாணாக்க மரபில்

வாராதார்க்குத் தம் உண்மைப்பொருளைப் புலப்படுத்துஞ் சொல்லாற்றல் வாயாதனவாய்த் தம்மைப்பயில்வாரெவர்க்குப் பெரியதொரு மறுக்கத்தினை விளைவிப்பனவாய் இருக்கின்றன. இத்தகைய இடர்ப்பாடு செந்தமிழ்நூல்களிற் காணப்படாதென்பதற்குத் திருக்குறளுஞ் சிவஞானபோதமுமே உறுபெருஞ்சான்றாம். சீரியநூல்களில், திருக்குறள் சிவஞானபோதம் என்னும் இவ்விரண்டுமே தாங் கருதியபொருளைத் தம்மின் வேறானவோர் உரையுதவி வேண்டாது தக்கார்க்குத் தெற்றெனப் புலப்படுக்குஞ் சுருக்கநூல்களாய்த் தலைசிறந்து நிற்கின்றன, சுருங்கியவடிவிலுந் திருக்குறள் ஒரு கண்ணாடியையொப்பது; சிவஞானபோதமோ ஒரு புன்னுனிமேல் நிற்கும் ஒரு பனித்திவலையையொப்பது; கண்ணாடியும் பனித்திவலையுந் தாம் வடிவிற் சிறியனவாய் இருந்தே தம்மிற்பெரிய பலவடிவங்களைத் தமகத்தேகொண்டு அவைதம்மை விளங்கக் காட்டுமாயினும் பனித்திவலை அளவின்மிகச்சிறியது, கண்ணாடியோ பனித்திவலையினும் பன்மடங்குபெரியது ; அதுபோற் றிருக்குறளுஞ் சிவஞானபோதத்தினும் பன்மடங்கு பெரியதொரு சுருக்க நூலாகும். எனவே, அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருட் பரப்பெல்லாம் ஒருங்கு செறித்துத் 'திருக்குறள்' யாத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது அறிவாற்றலினுங், கடவுள் உயிர் மும்மலம் வீடுபேறு என்னும் அறிதற்கரிய நுண்பொருட் பரப்பெல்லாம் ஆராய்ந்து தன்னகத்தடக்கித் தெளிக்குஞ் 'சிவஞானபோதத்'தை யாத்த ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனாரது தெய்வ அருளறிவின் ஆற்றல் பன்மடங்கு சிறந்த தொன்றாய் வீறிவிளங்கல் நடுநின் றாராய்வார்க்கெல்லாம் நன்கு விளங்கற் பாலதேயாம். திருக்குறண்மாட்சியினை வியந்து,

"தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்-மனையளகு



பழைய நாட்களிலேயே பயிராக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் ஒரு தொகுப்பாக வைக்கப்பட்ட மரச்செறிவே 'தோப்பு' என வழங்கப்படலாயிற்று. தொகுப்பு என்னுஞ்சொல்லே தோப்பு எனத் திரிபுற்றது.

இப்பழைய கொட்டைமாமரங்கள் பருத்துயர்ந்து, பரிய பரிய கோடுகளையுங் கொம்புகளையும் வளார்களையும் அவற்றில் இலைகளையும் நாற்புறங்களிலும் பரப்பி அடர்ந்து வானளாவி நிற்குந் தோப்புகளின் காட்சியானது காண்பார் கண்களுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியையும் ஆறுதலையுந் தருகின்றனவன்றோ? வெப்பம் மிகுந்த வேனிற்காலத்தில் ஊர்ப்புறத்தேசென்று, இத்தோப்புகளின் ஊடுநுழைந்து வெயிலேபடாத அம்மர நீழல்களில் வைகி இளைப்பாறுவதினும் மிக்கதோரின்பம் பிறிதுண்டோ? வேனிற்காலத்திற்கு முன்னுஞ்,சில இடங்களில் வேனிற்காலத் துவக்கத்தும் மாமரங்கள் பூவெடுத்தலால், அப்போது அப்பூக்களின் நறுமணத்தில் அளைந்து வந்து சில்லென்று வீசும் மெல்லிய தென்றற்காற்று நம் முடம்பின்மேற் படுங்கால் ஆ! அது நமக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகின்றது!

மற்றைப்பறவைகளைப்போல் எளிதிற் காணப்படுவதல்லாத குயிற்பறவைகள்வேனிற்காலத்தில்மாமரங்களில் அமர்ந்து கூவும் ஓசை கேட்கக் கேட்க இனியதாயிருக்கும்.பெரும்பாலும் மக்கள் வழங்காத ஊர்ப்புறத் தோப்புகளிலிருந்தே குயில்கள் கூவுதலால், தனித்த அவ்விடங்களிற்சென்று அவைகூவும் அவ் வின்னோசையைக் கேட்பது பின்னும் அவ்வினிமையை மிகுதிப்படுத்துகின்றது. ஆனாலுங், தங் காதலரைப்பிரிந்து, அவரது பிரிவை ஆற்றாது வருந்தும் மகளிர்க்குக் குயில்கூவும் ஓசை அவரது வருத்தத்தைப் பெருகுவிக்குமென்று நல்லிசைப்புலவர்கள் பாடியிருக்கின்றனர். அரசனும் புலவனுமான ஒல்லை



20482

யூர் தந்த பூதப்பாண்டியன் என்பான் தான் பாடிய செய்யுள் ஒன்றில்,

"மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில்
பருநா விளியா னடுநின்று அல்கலும்
உரைப்ப போல ஊழ்கொள்பு கூவ,
இனச்சிதர் உகுத்த இலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கின் நுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன்சொரிந் தன்ன
இகழுநர் இகழா இளநாள் அமையஞ்
செய்தோர் மன்ற குறியென நீநின்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப
வாராமையிற் புலந்த நெஞ்சமொடு
நோவல் குறுமகள்" (அகநானூறு, ௨௫)

எனத், தன் கொழுநனைப் பிரிந்த வேனிற்காலத்திற் குயிலிசைகேட்டு வருந்தும் ஒரு நங்கைக்கு அவடன்றோழி ஆறுதன்மொழி பகர்தலை எடுத்துக்காட்டியிருக்கின்றான்.

இனி, ஐப்பசித்திங்களிற் பூவெடுக்கும் ஒட்டுமாமரங்கள் பிஞ்சுபிடித்துக் காய்த்துச் சித்திரைத்திங்களிலேயிருந்து பழங்களைத் தருகின்றன. கார்த்திகைத்திங்களிற் பூத்துக் காய்க்கும் மரங்களோ வைகாசி அல்லது ஆனிமுதற் பழுத்து நறுஞ்சுவைக்கனிகளைத் தருகின்றன. இவ்வொட்டுமாமரங்கள் பூத்திருக்குங்கால் அவற்றிலிருந்து சிலநாட்கள்வரையில் வருங் குளிர்ந்தமணமானது உளத்திற்கு அமைதியான இன்பத்தை ஊட்டுகின்றது

ஒட்டுமாமரங்களின் தீஞ்சுவையினை அறிந்தவர்கள், வாழை பலா நாரத்தை மாதுளை விளா முதலான ஏனை எல்லா மரங்களின் கனிகளைவிட இவற்றையே மிகவும் விழைந்து பாராட்டுகின்றார்கள். உண்மையாகவே ஒட்டுமாங்கனிகளின் சுவை வேறெவ்வகைக் கனிகளுக்கும் இல்லை. ஆதலினாற்றான், குளிர்மிகுந்த ஐரோப்



பாதேயத்திலுள்ள வெள்ளைக்காரர்கள் மிகுந்த விலைகொடுத்து ஒட்டுமாங்கனிகளைத் தம்மூர்களுக்கு வருவிக்கின்றனர். சில காலங்களில் ஓர் ஒட்டுமாங்கனிக்குப் பதினைந்து ரூபாவரையில் விலைகொடுத்து வாங்குகிறார்கள் என்று கல்வியிற்சிறந்த ஒரு துரைமகன் எழுதியிருக்கின்றார். இவ்விந்திய நாட்டுக்கு மிகவுஞ் சேயவான தேயங்களுக்கு இவ்வொட்டுமாம்பழங்களைக் கொண்டு செல்லவேண்டுபவர்கள், சாடிகளில் தேனை நிரப்பி அத்தேனில் அப்பழங்களை அமிழ்த்திவைத்துக் கொண்டு போகின்றார்கள். இவ்விந்தியநாட்டிலுள்ள பெருஞ்செல்வர்களிற் சிலரும் ஒட்டுமாங்கனிகளிற் றமக்கு ஆராவேட்கை இருத்தலால், அவை கிடைப்பதில்லா மற்றைப் பருவ காலங்களிலும் அவற்றை யுண்டு இன்புறுதற் பொருட்டு, அங்ஙனமே அவற்றைத் தேன் நிறைத்த சாடிகளில் இட்டுவைத்துத், தாம் வேண்டுங்காலங்களில் எடுத்து அருந்துகின்றார்கள். முறைப்படியெடுத்துவைத்த தூய தேனில் எத்தகைய பச்சைப்பண்டங்களை இட்டுவைத்தாலும் அவை நெடுநாள்வரையிற் கெடாமல், இட்டக்கால் இருந்த யதப்படியேயிருக்குமென்று அங்ஙனஞ் செய்துபார்த்தவர்கள் சொல்லக்கேட்டிருக்கின்றேம்.

இனி, ஒட்டுமாம்பழங்களை விரும்பி அடுத்தடுத்து உண்பவர்கள் உடல்நலங் கெடாமைப்பொருட்டு, அவற்றை உண்டபின் காய்ச்சிய ஆவின்பாலைப் பருகுதல் வேண்டும். ஆனாலும், இவைதம்மைச் செரிக்கும் அளவறிந்து உட்கொள்பவர்கள் செழுமையான இரத்தம் ஊறப்பெற்று உடல்நல மனநலங்கள் வாய்ந்து இகழ்வர். அளவுக்குமேல் அவாவை அடக்காமல் அவையிற்றை உண்பவர்கள் வயிற்றுநோய் வயிற்றுக்கழிச்சலால் வருந்துவர். "அமிழ்தமேயானாலும் அளவறிந்துண்," "அளவுக்குமிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழிகள் நமதுடம்பின் நலத்திற்கு வேண்டுவவறிந்

துரைக்கும் உண்மைப் பொன்மொழிகளாகவே விளங்குகின்றன.

இனிக், கொட்டைமாமரங்கள் நார் உள்ளவைகளாயிருப்பினும் அவற்றிலுந் தீஞ்சுவைக்கனிகள் உண்டு. எனினும், ஒட்டுமாங்கனிகள் மிகுதியாய்க் கிடைக்கக் கூடியகாலம் வளர வளர, ஏழை யெளியவர்களைத் தவிர ஏனையோரெல்லாரும் ஒட்டுக் கனிகளையே மிகுதியும் வாங்கி அயில்கின்றனர். மேலும், ஒட்டுமாமரங்கள் வர வர நாடெங்கும் மிகுதியாய்ப் பயிர்செய்யப்பட்டுப் பெருகுதலால், இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அவை மிகுந்த விலைக்கு விற்றதுபோலில்லாமல், இப்போதவை நயமான விலைக்குக் கிடைக்கின்றன. அதனாற், கொட்டைமாம்பழங்கள் இந்நாளில் மிகுதியாய் விற்கக் காணோம். என்றாலும், ஊறுகாய் செய்வதற்குப் பெரும்பாலுங் கொட்டைமாங்காய்களையே எல்லாரும் பயன்படுத்துகின்றனர். மாங்கொட்டைகளையும் இராக் காலக் குழம்புகளுக்குச் சைவர்கள் பயன்படுத்துகின்றார்கள். மாம்பருப்புகள் வயிற்றுளைச்சலைப் போக்குதற்குச் சிறந்தமருந்தாக எளியமக்களாற் பயன்படுத்தப் படுகின்றன.

இனி, யாங்கள் ஒட்டுமாம்பழங்களைப் பழங்களாகவே பயன்படுத்தியதுடன், அவற்றின் காய்களையும் பருப்புக்குழம்பு, வெல்லப்பாகு, தயிர்ப்பச்சடி முதலியவற்றிற் சேர்த்து அருந்திப்பார்த்ததில், அவை இவ்வகையிலுங் குழைவுஞ் சுவையும் மிக்கனவாய் இருத்தல்கண்டு உவப்புற்றேம். ஊறுகாய் இட்டாலும் ஒட்டுமாங்காய்கள் களிப்பாய் நாவுக்கு நன்சுவை விளைக்கின்றன. இங்ஙனம் பல வகையாலும் பயன்பட்டு நம்நாட்டவரை இன்புறுத்தும் மாமரங்களை நம்மனோர்க்கு வழங்கிய இறைவன் றிருவருளுக்கு நம்முடைய நன்றியையும் வணக்கத்தையுஞ் செலுத்துவாமாக!



உழைப்பும் விடாமுயற்சியும் உடைய அறிவாளிகள்சிலர் ஆங்காங்குத் தோன்றுவதனாலேயே மக்கள் வாழ்க்கையானது மேன்மேல் அறிவும் இன்பமுந் தருந்தகைத்தாய் நடைபெறுகின்றது. அத்தன்மையரான அறிஞர் தோன்றாத மிகப்பழைய காலங்களில் நம்முன்னோர்கள் எங்ஙனம் உயிர்வாழ்ந்தனரென்பதைப் பழைய மக்கள்வரலாறு நுவலும்நூல்களில் (Anthropology) நாம் படித்துப் பார்ப்பமாயின், நந் நெஞ்சங் கலங்காதிராது. நாடோறும் உண்ணுதற்குச் செவ்வையான உணவும் உடுக்கக் கூறையும் இன்றி அவர்கள் பட்டபாடு நினைக்கநினைக்கப் பெருந் திகிலை உண்டுபண்ணுகின்றது. வயிற்றுக்கு உணவுதேடித் தந்து தமது உடலை ஓம்புவதே அவர்கட்கு அந்நாளில் ஓயாப் பெருமுயற்சியா யிருந்தது. இப்போதுள்ள யானைகளைவிடப் பன்மடங்கு பெரியவான 'மாமதம்' (mammoth) என்னும் பெரிய யானைகள் அந்நாளில் மந்தை மந்தையாக இருந்தன. அவ்வியானைகளை யொப்பவே உருவிற் பெரியவான கல்யானைகளுங், கொடும்புலிகளும், அரிமாக்களும், மலைப்பாம்புகளும், பெருமுதலைகளும், பெருங்கழுகுகளுங், கொடும்பெருங் குரங்குகளுங், கடல்நீரின் மட்டுமன்றி நிலத்தின்மேலும் வந்துலவும் பெரிய பெரிய கடல்விலங்குகளும் இம்மாநிலத்தே திரிந்தன. அவற்றினிடையேயிருந்து உயிர்பிழைத்த பண்டைநாள் மக்கள் இருக்க இல்லம் அமைக்கத் தெரியாதவர்கள்; மலைக்குகைகளையும் மரப்பொந்துகளையும் மர உச்சிகளையுமே இருப்பிடமாய்க்கொண்டவர்கள். நெடுங் காலம் வரையில் தமதுடம்பைக் குளிரும் வெப்பமுந் தாக்காமல், தழைகளாலேனும் மரப்பட்டைகளாலேனும் விலங்கின் தோல்களாலேனும் மறைத்துக் கொள்ளும் வகை தெரியாதிருந்தவர்கள். இத்துணை இடர்ப்பாட்டிற் சிறு சிறு கூட்டத்தினரா யிருந்த அப்பண்டைமக்கள்,

தமக்குந் தம்மைச்சேர்ந்தார்க்கும் உணவுதேடும்பொருட்டுக் காடுகளிலும், மலைகளிலுங், கடலோரம் யாற்றோரங்களிலுஞ் சென்றக்கால், அக்கொடிய பெருவிலங்குகளால் அவர்கள் எவ்வளவு துன்புறுத்தப்பட்டிருக்கவேண்டும், அவற்றொடு போராடியதில் எத்தனைபேர் மடிந்திருக்கவேண்டும்! அவர்கள் எல்லாருமே அக்கொடுவிலங்குகளின் போராட்டத்தில் மாண்டு மடிந்துபோயிருந்தால், நாமெல்லாம் இங்கே தலைக்காட்டிப் பிறந்திருத்தல்கூடுமோ! அப்பழையபோராட்டத்தில் அவ்விலங்கினங்களுக்குத் தப்பிப்பிழைக்கும் வகை கண்டறியும்பொருட்டுத் தம் அறிவையும் விடாமுயற்சியையும் பயன்படுத்தி அவற்றைத் தப்பி யுயிர்வாழ்ந்த சிலராயினும் வழிவழித் தோன்றினமையா லன்றோ நாம் இஞ்ஞான்று நாகரிகத்திற் சிறந்து இன்பவாழ்க்கையில் வாழ்கின்றோம்?

அப்பண்டைமக்கட் சிறுகூட்டத்தில் ஒரு சிலர் ஏனையோரிலுஞ் சிறிது அறிவுவிளக்கம் உடையராகித், தம்மோடு ஓயாப்போர் மலைந்த அக்கொடுவிலங்குகளைக் கொல்லுதற்கு வலியதீக்கற்களிலிருந்து கத்திகளும் மழுப்படைகளும் அம்புகளுஞ் செய்யக் கற்றுக்கொண்ட காலந்தொட்டும்; அதன்பின் அப்படைகளைக்கொண்டு அவ்விலங்குகளைக் கொன்று அவைதம் இனங்கள் பின்னர் அச்சத்தால் தம்மையணுகாமல் அகன்றோடிவிடத் தாங் காடுகளிலும் மலைகளிலும் அச்சமின்றி யுலவி ஆங்காங்குள்ள காய்களையுங் கனிகளையுங் கிழங்குகளையும் வித்துக்களையும் இலைகளையும் மிகுதியாய்ப் பெற்றுண்டும், மரக்கோடுகள் பொந்துகளிற் கிடைத்த தேனையும் மலைச்சுனைகள் மலையருவிகள் கான்யாறுகள் மடுக்களிற் பெற்ற நீரையும் பருகியும் நாளுக்குநாள் உடல்நல மனநலங்களிற்சிறந்து அவரது கால்வழி பெருகத்துவங்கிய காலந்தொட்டும்; அதன்பிற் றம்மை யெதிர்த்துத் தம்மாற் கொல்லப்பட்ட விலங்கின் தசைகள் மலைப்பாறைகண்



மேற் கிடந்து வெயில் வெப்பத்தால் வெதுப்பப்பட்டுத் தின்னுதற் கேற்ற மணமுஞ் சுவையும் வாய்ந்தனவாதலைக் கண்டுகொண்ட அம்மக்களில் வேறு சிலர், வெயிலைப்போல் வெய்யவாய்ச் சுடும் நெருப்பு ஒன்று உண்டென்பதைத் தாந் தீக்கல்லிலிருந்து கத்தி மழு முதலான கருவிகள் அமைத்தக்காற் பறந்த தீப்பொறிகளால் அறிந்து, அக்கற்களை ஒன்றோடொன்று மோதியுண்டாக்கிய தீயிற் பிறகு அவ்விலங்கின் தசைகளை வதக்கிச் சுட்டுத் தின்னத் தெரிந்த காலந்தொட்டும்; பறவையினங்கள் தாங் குஞ்சுபொரிக்கும் பருவம் அண்முதலும், நார்களாலும் மரக்குச்சிகளாலும் மரப்பஞ்சுகளாலுங் கூடுகள் கட்டி அவற்றினுள்ளிருந்து முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனிதுவாழ்தலை உற்றுநோக்கிய அப்பழைய மக்களிற் பின்னுஞ்சிலர் தாமும் அப்பறவைகளைப்போல் மரக்கொம்புகள் வளார்கள் நார்கள் இலைகளாற் சிறு சிறு குடில்கள் அமைத்து அவற்றுட் டாமுந் தம்மக்களும், வெயில் மழை பனி பனிக்காற்று முதலியவைகளால் அலக்கணுறாமல் இனிது வாழத்தெரிந்த காலந்தொட்டும்; மழையில் நனையாமலுங் குளிரில் நடுங்காமலும் பறவைகள் விலங்குகள் உடம்பெங்கும் மயிர்ப்போர்வையால் நன்குமூடப்பட்டிருத்தலைக் கருதிப்பார்த்த அப்பண்டைமாந்தரிற் பின்னுஞ்சிலர் தாமுந் தாங்கொன்ற விலங்குகளின் தோலை உரித்தெடுத்து அவற்றின்மேலுள்ள மயிரைச் சீவாமற் றம்மேல் அவைதம்மைப் போர்த்துக் கொள்ளத் தெரிந்த காலந்தொட்டும்; அப்பறவைகளும் அவ்விலங்குகளுந் தம்மெண்ணங்களைத் தமக்குட் சிற்சில ஒலிகளால் அறிவித்துக்கொள்ளுதலைப் பலகாலும் உற்றுநோக்கி வியந்த அம்மாந்தரில் மேலுஞ் சிலர் தாமும் அவைபோற் சிற்சில ஒலிகளை எழுப்பித் தங்கருத்தைத் தம்மனோர்க் கறிவிக்கத்துவங்கிய காலந்தொட்டும்; நம் முதுமக்களின் வாழ்க்கையானது வரவர நாகரிகத்தில்

வளர்ந்தோங்கி வரலாயிற்றென்பதை நாங் கருத்திற் பதித்தல்வேண்டும்.

அங்ஙனம் நம்பண்டைமக்கள் தமதறிவைமேனுக்கு மேற் பயன்படுத்தி உழைப்பும் விடாமுயற்சியும் உடையராய் நடந்திரா விட்டால், மக்கட் பூண்டென்பதே யொன்று சுவடில்லாமல் மாய்ந்து மறைந்துபோயிருக்கு மென்பதை நாஞ்சொல்லுதலும் வேண்டுமோ? அவ்வாறு அவர்கள் இந்நிலவுலகிற் றோன்றிய காலம்முதற் சிறிதும் மடிந்திராமல் அறிவும் முயற்சியும் உடையராய் ஒழுகி வாழ்க்கைசெலுத்திவந்த இறந்தகால நிகழ்ச்சியினை நாம் ஆராய்ந்து பார்க்கப்பார்க்க, நாம் உயிரோடிருக்கும் இந் நிகழ்காலத்தும், நமக்குப் பின் நம்மரபில் வருவார் உயிர் வாழும் எதிர்காலத்தும் எல்லாரும் நாளுக்குநாள் எவ்வளவு அறிவும் எவ்வளவு முயற்சியுமுடையராய் ஒழுகுதல் வேண்டுமென்பது விளங்காமற்போகுமோ?

இனி, அறிவும் உழைப்பும் முயற்சியும் என்னும் மூன்றனுள் அறிவை மேன்மேற் பெருக்கினுலல்லாமல், உழைப்பும் முயற்சியும் மிக்கபயனைத் தரா. நாடோறுங் காலையில் எழுந்து மாலைவரையில் உழுதொழிலைச் செய்வோனுஞ், சரக்குவண்டியிழுப்போனும், யாற்றிற் படகு செலுத்துவோனுங், காட்டில் விறகுவெட்டி விற்போனுந் தாம் வழக்கமாய் மேற்கொண்ட அவ்வுழைப்புக்குமேற் றமதறிவைப் பெருகச்செய்வதில் அவாவில்லாதவர்களாய் நாட்கழிப்பராயின், அவரது செயல், நெற்குத்தும் பொறி, மாவரைக்கும் பொறி, நீர்இறைக்கும் பொறி, வண்டியீர்க்கும் பொறி முதலியவற்றின் அறிவில்லாச் செயலையே ஒப்பதாய்விடும். ஆகவே, கடுமையானதோர் உழைப்பிற் புகுந்திருக்கும்போதும் அதனை மேன்மேல் அறிவுடன்செய்து பயன்படுத்துவதோடு, அதுசெய்தநேரம் போக மிச்சமான நேரத்தை உயர்ந்த அறிவுடையோர் செய்த நூல்களைப்பயல்வதிலும் பயன்படுத்தல்வேண்டும்.



ஏனெனில், அறிவை மேன்மேற் பெருக்குவதற்கு ஏற்ற வழி, அறிவின் மிக்கார் இயற்றிய நூல்களை இடையறாது பயில்வதே யாகும். மணற்கேணியினைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுதல்போல, ஆன்றோர் நூல்களைக் கற்கக் கற்க அறிவு எல்லையின்றி வளராநிற்கும்.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

என்றார் திருவள்ளுவரும். அங்ஙனமே, வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய செல்வப்பொருளை ஈட்டுதற்குப் பலதுறைகளிற் புகுந்து பல்வகை முயற்சிகள் செய்வோரும், அம் முயற்சியளவில் தமதறிவைக் கரைகோலி மட்டுப்படுத்திவிடாமல், அம்முயற்சி யவிந்த நேரங்களில் விழுமிய அறிவு நூல்களைத் தொடர்பாகக் கற்று அறிவை விரிவுசெய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யாக்கால், தமக்கு இரைவேண்டுங் காலத்துங் குஞ்சு பொரிக்குங்காலத்தும் மிக்க சுருசுருப்புடன் முயன்று, பின்னர் முயற்சி யற்று வாளா இருந்து கழியும் பறவைகள் முதலான சிற்றுயிர்களுக்கும் மக்கட்கும் வேற்றுமை இல்லையாய் விடும். இரைதேடித் தின்றபிற், சிற்சில காலங்களில் ஆணும் பெண்ணுமாய் மருவிச் சிறிது இன்புறும் அத்துணையே யன்றி, அதனின் மிக்க இன்பத்தைத் தொடர்பாக நுகர்தற்கேனும், அந் நுகர்ச்சியினைப் பயத்தற்கேற்ற அறிவினை மேன்மேற் றோற்றுவித்தற்கேனும் அச் சிற்றுயிர்கள் வல்லன அல்ல. மக்களோ தமக்கு அரிதின் வாய்த்த பகுத்தறிவின் மாட்சிகொண்டு தமது வாழ்க்கையில் வருந் துன்பங்களை வரவரக் குறைத்து, நாளுக்கு நாள் தாந் தொடர்பாக இன்பந் துய்த்தற்கேற்ற வழிதுறைகளைத் தம்மறிவு முயற்சியாற் கண்டடைந்து வருகின்றனர். இவ்வாறு அறிவும் இன்பமும் நாளுக்குநாட் பெருகப்பெறும் மக்கள் வாழ்க்கைதான் நாகரிகவாழ்க்கை யென்றும், மற்று அவையிரண்டும் பெருகுதல் இல்

லாத மாக்களின் உயிர்வாழ்க்கையோ நாகரிகமில்லா வெற்றுயிர் வாழ்க்கையென்றும் வழங்கப்படும். தமக்குள்ள பகுத்தறிவினைப் பயன்படுத்துகின்றவர்களே மக்கள்; மற்று, அதனைப் பயன்படுத்தாதவர்களோ மாக்கள். இந்த உண்மை முறையில் வைத்து நம்நாட்டவர் வாழ்க்கை நிலையினையும் மேல்நாட்டவர் வாழ்க்கை நிலையினையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், மேல்நாட்டவர் நிலையே மிகவும் பாராட்டற்பாலதான விழுப்பமுடைத்தாய் விளங்காநிற்கின்றது. நீராவிப்பொறி, அச்சுப்பொறி, காவல் விளக்கு(Safety lamp), மின்செய்தி (Electric telegraph), கம்பியில் செய்தி (Wirless message) முதலான பலவியப்புகளையெல்லாம் அரும்பாடுபட்டுத் தாங் கண்டறிந்ததல்லாமலுந், தாங்கண்ட அவ்வியப்புகளைக் கோடி கோடியாகப் பொருட்செலவு செய்து இம்மாநிலமெங்கும் பரப்பி, எல்லா மக்கள் இனமும் அவற்றின் பயனையெய்தி, முன்னே தமக்கிருந்த பல்பெருந் துன்பங்களெல்லாம் நீங்கி இன்புற்று வாழுமாறு பேருதவி புரிந்துவரும் மேனாட்டறிஞரின் அறிவுமுயற்சி, எல்லாமாந்தரின் நன்றியறிவுக்கும் இடனாய்த் திகழ்கின்றதன்றோ?

அங்ஙனம் மேனாட்டறிஞர் கண்டறிந்து பரப்பிய பல்பெரும் பொறிகளில், நூல்நூற்கும் பொறியும் மிக்கதொரு பயனை உலகிற்கு விளைத்த வியத்தகு சிறப்புவாய்ந்ததாகும். இதனை ஓவாது அறிவுமுயன்று கண்டுபிடித்த மேலோர் **ஆர்க்குரையர்** (Arkwright) என்னும் பெயரினராவர். இவர்க்கு முப்பதாண்டுகளுக்கு முன்னேயிருந்த வேறு இருவர் நூற்கும்பொறிகளை வருந்தியமைத்தனராயினும், அவை முற்றுந் திருத்தமாக அமைக்கப்படாமையால் அவை தொழிற்படுத்தப்பட்டக்காற் செவ்வனே இயங்காமல் வீணாய்ப்போயின. மற்று, ஆர்க்குரையரோ தமக்கு முன்னேயிருந்தார் கண்டுபிடித்தவைகளில் இருந்த குறைபாடுகளையெல்லாம் நீக்கி, மிகவுந் திருத்தமானதொரு முறையிற் றாமே புதுவதாக ஒரு 'நூற்பொறி'யினைச் செய்துமுடித்தார்.



ஆர்க்குரையர், பெரும்பாலும் ஏனைப்பெரியாரைப் போற், றாழ்ந்தகுடியிற் றோன்றியவர். இவர் கி.பி. 1732-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் கண்ணதான 'பிரத்தன்' (Preston) என்னுந் துறைமுகப்பட்டினத்திற் பிறந்தார். இவர்தம் பெற்றோர்களோ மிகவும் ஏழைமையான நிலையிலிருந்தார்கள். அவர்கட்குப்பிறந்த பதின்மூன்று பிள்ளைகளுள் இவர் கடைசிப்பிள்ளை யாவர். இவர் பள்ளிக்கூடத்திற்சென்று கல்விபயின்றதேயில்லை; இவர் கற்றுக்கொண்டதெல்லாம் இவர் தாமாகவே முயன்று கற்றதொரு சிறுகல்வியாகும்; தமது முடிவுகாலம்வரையில் மிகவுந் தொல்லைப்பட்டே இவர் ஏதும் எழுதக்கூடியவராய் இருந்தனர். இவர் சிறுபிள்ளையாயிருந்தஞான்று, ஓர் அம்பட்டனிடத்தில் தொழில் கற்றுக்கொள்ளுமாறு விடப்பட்டார். அதனை நன்குகற்றறிந்தபின், 'பொலுத்தான்' என்றும் ஊரில் தாம் அத்தொழிலை நடத்துதற்குச் சென்று, நிலத்தின் கீழ் உள்ளதோர் அறையைக் குடிக்கூலிக்கெடுத்து, அதன்மேல் "நிலத்தின் கீழ் அம்பட்டனிடம் வாருங்கள், அவன் ஒரு பணத்திற்குச் சிரைக்கின்றான்" எனப் பலகையும் எழுதிக் கட்டிவிட்டார். அதனால், மற்றை அம்பட்டர்க்கு வருவாய் சுருங்கவே, அவர்களுந் தமது சிரைப்புக்கூலியை அந்த அளவுக்கே குறைக்கவேண்டியவரானார்கள். அதுகண்ட ஆர்க்குரையர் தமது தொழில் நன்குநடைபெறல்வேண்டி, "அரைப்பணத்திற்கு இங்கே திருத்தமான சிரைப்பு" எனப் பலகை எழுதிக் கட்டினார்.

இவ்வாறு சில ஆண்டுகள் கழித்தபின், அவர் அந்நிலவறையைவிட்டுத், தெருத்தெருவாய்த்திரிந்து மயிர் விற்பனைசெய்யுந் தொழிலை மேற்கொண்டார். அந்நாளில் மேல்நாட்டவர் தந் தலைக்குப் பொய்ம்மயிர் வைத்துப்

புனைந்துகொள்வது வழக்கம். அதனால், அஞ்ஞான்றை மயிர்வினைஞர் அத்தகைய பொய்ம்மயிர் முடிகள் செய்து விற்குந்தொழிலை மிகுதியாய் மேற்கொண்டிருந்தனர். ஆகவே, ஆர்க்குரையரும் அம்முடிகளின் பொருட்டுத் தலைமயிர் வாங்கி விற்றுவந்தார். இலங்காஊரிற் கூடுஞ் சந்தைகளில், தங் கூந்தலை நீளப்பின்னிவிடுதற்காகத் தலைமயிர் வாங்கவரும் மகளிர்க்கு இவர் மயிர்விற்பனை செய்ததில் நல்ல ஊதியத்தை அடைந்தார். அதுவல்லாமலும், இவர் ஒருசிறந்த மயிர்ச்சாயஞ் செய்து திறமையாக விற்றதிலிருந்தும் மிக்க ஊதியத்தைப்பெற்றார். இங்ஙனமெல்லாம் இத்துறையில் இவர் சுருசுருப்பாக முயன்றும், இவரது வாழ்நாட்செலவுக்குமேல் மிகுதியாய் வேறேதுங் கிடைத்திலது.

பின்னர்ச் சில ஆண்டுகளிலெல்லாம், பொய்ம்மயிர் புனையும் நடையும் மாறிவிடலாயிற்று. அதனாற், பொய்ம்மயிர்வினைஞரெல்லாரும் பெரிதும் இடருழக்கலானார்கள். ஆயினும், ஆர்க்குரையர் தமது முயற்சியை அத்துறையினின்றுந் திருப்பித், தமக்கு இயற்கையாய் வாய்ந்தபொறியமைக்கும்வழியிற்செலுத்தத்துவங்கினார். அஞ்ஞான்று, நூல்நூற்கும் பொறியொன்று அமைப்பதற்குப் பலர் பலவாறு முயன்றுகொண்டிருந்தனர். அதுகண்ட ஆர்க்குரையர் தாமும் அத்துறையில் இறங்கினார். தாமாகவே கலையறிவிற் றேர்ச்சிபெற்ற மற்றைப்பெரியாரைப்போல், இவரும் முன்னமே தமக்குக் கிடைத்த ஒழிவுநேரங்களில், எப்பொழுதும் இயங்கவல்லதான ஒரு பொறியைப் புதிதுசெய்வதிற் றமது கருத்தைச் செலுத்திவந்தார்; அம்முயற்சியிலிருந்து நூற்கும் பொறியினை ஆக்குவது அவர்க்கு எளிதில் வந்து கைகூடிற்று.

அங்ஙனம் அதனை ஆக்கும் ஆராய்ச்சியிலேயே இவர் தமது கருத்தை முழுதும் ஈடுபடுத்தியிருந்தமையால், தமக்கு வழக்கமாயுள்ள தொழிலையும் பாராமுகஞ்



செய்தனர்; அதனாற், சிறிது மிச்சம்பிடித்து வைத்திருந்த பணத்தையுந் தொலைத்துவிட்டனர்; கொடிய வறுமையும் இவரைவந்துபற்றி நலிவதாயிற்று. இத்தறுவாயில் இவர்க்கு மணமாகியிருந்தது. இவர்தம் மனைவி, இவர் தம்முடைய காலத்தையுங் காசையும் வேண்டுமென்றே பாழாக்குவதாகக்கருதி மனம்பொறாதவளாய், ஒருநாள் தனக்குத் திடுமெனத்தோன்றிய மிக்கசினத்தால், தனது குடும்பத்திற்குவந்த வறுமையின் காரணத்தைப் போக்குவாள்போல், இவர் உருவாக்கிவைத்திருந்த மூலப்பொறிகளையெல்லாம் வலிந்தெடுத்து உடைத்தெறிந்தாள். ஆர்க்குரையரோ தாம் மேற்கொண்டதோர் அருமுயற்சியில் விடாப்பிடியும் மனக்கிளர்ச்சியும் வாய்ந்தவர்; ஆகவே, இவர் தம் மனைவிசெய்த இவ்வடாச்செயலைக்கண்டு அளவுக்குமிஞ்சிய மனநோக்காடுடையராய்,உடனே அவளை விட்டுப் பிரிந்துபோயினர்.

பிறகு, அயலூர்களில் இவர் செல்கையில், 'வாரிங்கதன்' (Warrington) என்னும் ஊரில் நாழிகைவட்டில் (கடிகாரம்) செய்வாரான 'கே' எனப்பெயரிய ஒருவரோடு இவர் பழக்கமானார். அவர், இவர் ஆக்கிய 'ஓவா இயக்கப்பொறி'யின் சில பகுதிகளைச் செய்வதற்கு உதவி புரிந்தார். ஆர்க்குரையர் சிகழிகை விற்குந் தொழிலை அறவே கைவிட்டுத், தாஞ் சமைத்தற்குப் புகுந்த நூற்பொறியை முற்றுந் திருத்தமாகச் செய்துமுடித்தலிலேயே கருத்தொருப்பட்டு நின்றார். அதனை முடித்தபின், அதன் முதற்படியினை இவர் சொல்லிக் காட்டிய வண்ணமே 'கே' என்பவர் செவ்வனே செய்தமைத்தார். அங்ஙனம் அமைத்த அப்பொறியைப், பிரத்தன்மா நகரின் கண்ணதான இலக்கண அறச்சாலையின் கூடத்திற் கொண்டுபோய் வைத்தார். இவர் தமக்குள்ள வறுமையாற் கந்தையாய்ப் போன உடைகளை உடுத்திருத்தல் கண்ட அவ்வூரவர் சிலர் தாம் ஒருங்குசேர்ந்துதவிய

பொருளாற் புதிய உடைசெய்து அவரை உடுப்பித்தனர். அதன்பிறகே இவர் தமது பொறியினைக் காட்டுங் கூடத்திற்குச் சென்றனர். ஆனாற், கையால் நூல் நூற்றுப் பிழைக்குந் தொழிலாளிகள் நிறைந்த அந் நகரத்தில் இவர் தமது நூற்பொறியைக் கொணர்ந்து காட்டுவது இடர் விளைப்பதொன்றாய்த் தோன்றியது. அவ்வறப்பள்ளிக்கூடத்துக்கு வெளியிலே அத்தொழிலாளிகள் இடையிடையே உறுமும் ஒலி கேட்டது. இதற்கு முன் ஒரு நூனாழிப்பொறி அமைத்த 'கே' என்பவரும், இராட்டினம் ஒன்றமைத்த எளிய 'ஆர்கிரிவரும்'தாம் ஆக்கிய அப்பொறிகளைப் பலர்க்குங் காட்டப்போன ஊர்களில் அவ்வூர்க் கலகக்காரரால், அவருடைய பொறிகள் உடைத்தெறியப்பட்டன. அந்நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்த ஆர்க்குரையர் இனி இவ்வூரிற் றங்குவது தொல்லைக் கிடமாகுமென அஞ்சித், தமது பொறியையெடுத்துக்கொண்டு அத்தகைய துன்பத்திற்கு அஞ்சவேண்டுவதில்லாத 'நாட்டிங்காம்' என்னும் நகருக்குப் போயினர்.

அங்கே சில நாள் வைகித், தமக்குப் பொருளுதவி செய்து, தமது நூற்பொறியைப் பயன்படுத்தத் தக்காரை இவர் நாடுகையில், அந்நகரில் மிக்க புகழ்உடைய ஒரு தொழில்நிலையத்தின் தலைவரும் பொறிகள் அமைப்பதிற் றிறமைவாய்ந்தவரும் ஆன 'இசுருதர்' (Strutt) என்பார் தமக்கு நண்பராகப்பெற்றார். இசுருதர் இவர் ஆக்கிய நூற்பொறியின் அமைப்பினைக் கண்டு மிகவும் வியந்து, தம்மொடு கூட்டாகச் சேர்ந்து நூர்குந்தொழில் நடாத்தும்படி இவரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதுமுதல் இவர்க்கு நல்லகாலம் பிறந்தது. 1769-ஆம் ஆண்டில் ஆர்க்குரையர் பெயரினாலேயே அந்நூற்பொறிக்குரிமை வாங்கப்பட்டது. அதே ஆண்டில் 'ஜேம்ஸ்வாட்' என்பவர் புதிதுகண்டமைத்த 'நீராவிப் பொறி'க்கு உரிமை வாங்கப்பட்ட நிகழ்ச்சியும் ஒத்துக்



கொண்டமை பெரிதும் இறும்பூது பயப்பதாயிருக்கின்றது. அதன்பின், அந்நாட்டிங்காம் ஊரிலேதான் முதன்முதல் ஒரு பஞ்சாலை நிறுவப்பட்டது.

இவ்வளவிலே ஆர்க்குரையரின் பாடு முடிந்ததென்று சொல்லுதற்கிடமில்லை. தாம் இயற்றிய நூற்பொறி இயங்குங்கால் அதில் இவர் இன்னும் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டியவரானார். ஓயாமல் அதிற் பலமாறுதல்களுந் திருத்தங்களுஞ் செய்தபடியாகவேயிருந்தார். அங்ஙனமெல்லாம் இவர் அதனைச் செப்பஞ் செய்து கொண்டுவந்த பின்னர்த்தான் அது செவ்வனேயியங்கிப் பயன்றருவதாயிற்று. இவ்வாறு அது செவ்வனே நடைபெறலானபின்னுஞ், சில ஆண்டுகள் வரையில் தன்னால் வருவாய்க்கிடமின்றி மனவயர்ச்சியினை உண்டாக்கியதன்றியும், அது தன் செலவுக்காக ஏராளமான பொருளையும் விழுங்கிவரலாயிற்று.

இவ்வாறு சில ஆண்டுகள் கடந்தபின், நன்மையுண்டாகி வருந் தறுவாயில், இலங்காமாகாணத்துக் கைந்நெசவுகாரர்கள், ஆர்க்குரையரது உரிமை நூற்பொறியை வலிந்துகைப்பற்றி உடைத்தெறிந்தனர். ஆர்க்குரையர் தொழிலாளிகட்குப் பகைஞர் என்றும் ஆங்காங்கு ஏசப்பட்டார். சோர்லிஎன்னும் ஊருக்கு அருகாமையில் இவர் அமைப்பித்த பஞ்சாலையினையும் அவ்வூர்க் கலகக்காரர்கள் இடித்தழித்தனர்; ஊர்காவற்காரர்களும் படைஞரும் அதனைத்தடுக்க எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. ஆர்க்குரையரின் பஞ்சாலையிற் செய்யப்பட்டு வெளிவந்த சரக்குகள், ஏனையோர் கொணர்ந்து விற்ற சரக்குகள் எல்லாவற்றினும் மிகச்சிறந்தனவாயிருந்தும், இலங்கா ஊரார் அவைதம்மை வாங்காமல் மறுத்துவிட்டனர். அதன்மேலும், இவருடைய பொறிகளுக்கு உரிமை கொடுப்பதனையும் அவ்வூரவர் மறுத்துவிட்டதுடன், இவரை அறமன்றத்திற்கு இழுத்து நசுக்கிவிடவுந் துணிக்

தனர். செம்மையுள்ளம் வாய்ந்தாரனைவரும் அருவருக்குமாறு இவரது உரிமையினையும் அவர்கள் கவிழ்த்துவிட்டனர். வழக்குமுடிந்து இவர் தம் எதிரிகள் தங்கியிருந்த உணவுவிடுதி யோரமாய்ச் செல்கையில், அவர்களுள் ஒருவன் இவரது செவியிற்கேட்கும்படி "கடைசியாக நாம் பழைய அம்பட்டனைத் தொலைத்துவிட்டோம்" என உரக்கச்சொல்லினன்; அதற்கிவர் பொறுமையாய், "அதைப்பற்றிக் கவலையில்லை; இன்னும் என்னிடஞ் சிரைக்குங்கத்தி மிச்சமாய் இருக்கின்றது; அதுகொண்டு உங்களெல்லாரையுஞ் சிரைத்துவிடுவேன்" என மறுமொழிதந்தனர்.

பின்னர்ச் சிறிதுகாலத்தில் இவர் இலங்காவூர்முதற் பல இடங்களிற் புதிய பஞ்சாலைகள் அமைத்தனர். இசுருதருடன்கொண்ட கூட்டுத் தீர்ந்தபின் இருவருஞ் சேர்ந்து நடத்திய பஞ்சாலைகளும் இவருடைய கைக்கு வந்தன. இவருடைய பஞ்சாலைகளிலிருந்து போந்த சரக்குகள் தொகையிலுந் தன்மையிலும் விழுமியவாயிருந்தமையாற், சிறிதுகாலத்திலெல்லாம் நூல்வாணிகம் முழுதும் இவரது ஆட்சிக்கே உட்படலாயிற்று. ஏனைநூல் வணிகர் தொழில் முற்றும் இவரது ஆட்சிக்கீழ் வந்தமையால், இவரே சரக்குகளின் விலையை ஒருநிலையில் வைத்து உறுதிப்படுத்தினர்.

இவ்வாறாக ஆர்க்குரையர் தமக்குநேர்ந்த பல அல்லல்களின் இடையிலுஞ் சிறிதும் உளங்கலங்காதவராய்த், தாம் மேற்கொண்டதொரு சிறந்த முயற்சியிலேயே உறைத்துநின்றமையால், இவர் அவ்விடர்களையெல்லாம் புறங்கண்டு, தமதரியமுயற்சியின் பயனை நன்கு பெறலானார். முதன்முதற் றாம்ஆக்கிய நூற்பொறிக்குப்பின் பதினெட்டாண்டுகள் கழித்துத், 'தெரிபி' மாகாணத்தினுள்ளாரால் இவர் பெரிதும் நன்குமதிக்கப்பட்டு, இவர் அவ்வூர்க்கு நாட்டாண்மைக்காரராகவும் ஏற்படுத்தப்

இருந்தது! பற்பல ஊர்களிலும் நகர்களிலும் உள்ள அன்பர்கள் தாந்தாமாகவே அடிகளின் அறுபதாம் ஆண்டு நிறைவை, அடிகள் தமது சிந்தனைக் கட்டுரை கள் என்னும் நூலின் "விளக்க உரைக் குறிப்புகளில்" எழுதியிருக்குந் தமது வரலாற்றுக் குறிப்பைக் கொண்டு தெரிந்துகொண்டு, விழாக் கொண்டாட லாயினர்கள்.

---

## வாழ்த்துங் காணிக்கையும் அனுப்பியவர்கள்

பாகனேரி "பொருள் வணிக இளைஞர் கழகத்'தின் தலைமை அமைச்சர் திரு. S. T. கண்ணப்பன் அவர்கள் அவ்வூர் அன்பர்கள்பாலிருந்து திரட்டி வாழ்த்துடன் அனுப்பிய தொகை ரூ 66-4-0. 23-10-1936

பர்மாவில், கையான்பியான் என்னும் ஊரில் R. M. L. K. R. கடையிற் கணக்காளரா யிருக்குந் திரு. சொ. லிங்கேஸ்வரன் அவர்கள் வாழ்த்துடன் அனுப்பியது ரூ 5. 25-8-1936.

சைகோன் ஊரிலுள்ள திரு. S. P. K. A. காசி விசுவநாதன் அவர்கள் அவ் வூரன்பர்கள்பானின்றுந்திரட்டி வாழ்த்துடன் அனுப்பி வைத்த தொகை ரூ 31. 25-8-1936.

சிதம்பரம் R. C. T. H. உயர்தரக் கல்விச்சாலைத் தமிழாசிரியர் திரு. வி. மு. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் அவ்வூர் அன்பர்கள்பானின்றுந்திரட்டி வாழ்த்துடன் அனுப்பிய தொகை ரூ 35. 26-8-1936.

இரங்கூனை அடுத்த கம்பைப் "பொருள் வணிகர் கல்விக்கழக" அமைச்சர் களான திரு. மு. சாத்தப்ப செட்டியாரவர்களும், திரு. மு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களும் பர்மாவிலுள்ள அன்பர்கள்பாலிருந்து திரட்டி வாழ்த் துடன் அனுப்பி வைத்த தொகை ரூ 376-4-3. 27-10-1936.

தாது, ஆனி, ஆடி—"தாயகம்" ஆசிரியர் திரு. S. அருணசலம், துறையூர், "வாழ்த்துப்பா," "கட்டுரை."

| | |
|---|---|
| 1936 சூன், 13உ | அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழாசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார், M.A., B.L. "வேண்டுகோட்கட்டுரை" |
| 20-உ | திரு. புண்ணிய மூர்த்தி முதலியார், திருச்சிராப்பள்ளி, "வேண்டு கோட் கட்டுரை" |
| 27-உ | திரு. செ. ரா. இராமசாமிப் பிள்ளை யவர்கள், 'தமிழகம்,' 'விடு தலை'யில் "வாழ்த்தும் கட்டுரையும்." |
| சூலை 9-உ | திரு. மு. சாத்தப்ப செட்டியார் 'தனவணிக'னில் "வேண்டுகோட் கட்டுரை" |
| 9-உ | "தனவணிகன்" இதழின் வேண்டுகோட் கட்டுரை. |
| 10-உ | திரு. மு. சாத்தப்ப செட்டியார், "சுதந்தரன்" இதழிற் கட்டுரை. |
| 13-உ | திரு. P. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., எம். எல். சி., வக்கில், நாகர் கோயில், "வாழ்த்து" |
| 14-உ | திரு. தே. வீரராகவன் அவர்கள், தமிழாசிரியர், V. C. உயர்தரப் பள்ளிக்கூடம், ஓமலூர், "வாழ்த்துப்பா" |
| 14-உ | வித்வான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், தமிழாசிரி யர் அரவங்காடு உயர்தர போர்டு பள்ளிக்கூடம், "வாழ்த்து" |
| 15-உ | அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களுந் தமிழ் மாணவர் களும், அவைகூடித் தீர்மானித்து விடுத்த "வாழ்த்து" |
| 15-உ | அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர் திரு. இராக வையங்கார், கம்பிவழி 'வாழ்த்து" |
| 15-உ | திரு. இலட்சுமணப் பிள்ளையவர்கள், பி. ஏ., இசையாசிரியர், திருவ னந்தபுரம், கம்பிவழி "வாழ்த்து" |
| 15-உ | ஒளவைத் தமிழ்க் கழகம், திருவோத்தூர், "வாழ்த்துப்பா" |

1936 ஜூலை 15 திரு. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், தமிழாசிரியர், கோயம்புத்தூர், கம்பிவழி "வாழ்த்து"

15-ௗ திரு. ஜே. ஜி. சுந்தரம் அவர்கள், தமிழாசிரியர், கால்டுவெல் உயர்தரப் பள்ளிக்கூடம், தூத்துக்குடி, "கட்டுரை"

15-ௗ Father ஞானப் பிரகாசர், நல்லூர், யாழ்ப்பாணம், கம்பிவழி "வாழ்த்து"

15-ௗ தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி, 'வாழ்த்துத் தீர்மானம்"

15-ௗ திரு. ஏ. நாராயண பிள்ளையவர்கள், திருநெல்வேலி, "விளம்பர வெளியீடு: தமிழ்மொழியின் தாதா"

15-ௗ முசிரி, போர்டு உயர்தர பள்ளிக்கூட மாணவர் கல்வி வளர்ச்சி சங்கம். "வாழ்த்துத் தீர்மானம்"

20-ௗ தென்னிந்திய தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள். பி. ஏ., எல். டி. "வாழ்த்துப்பா"

27-ௗ மறைமலையடிகளின் அறுபதாம் ஆண்டு விழாக்கமிட்டி, இரங்கூன் தனவணிகன்.

ஆகஸ்டு 1 ஈரோடு, உயர்தரப் பள்ளிக்கூட ஆசிரியர் கூட்ட "வாழ்த்துரை"

1-ௗ திரு. சி. த. செல்லப்பனவர்கள், கோலப்பிறை, மலாய்நாடு, "வாழ்த்துரை"

2-ௗ மறைத் திரு. குக. மணிவாசக சரணலைய அடிகள், "வாழ்த்துப்பா"

5-ௗ வித்வான் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், "வாழ்த்துப்பா"

7-ௗ விளாங்குடி, திருவள்ளுவர் நிலையம், "வாழ்த்து"

9-ௗ இரங்கூன் தனவணிகனில் திரு. எஸ். நாராயணன் செட்டியார், "கட்டுரை"

12-ௗ விடுதலையில், திரு. முருக இலக்குவன் அவர்களின் "நீண்ட வாழ்த்துப்பா"

13-ௗ தனவணிகனில் மறைமலையடிகள் உருவப் படம்.

20-ௗ தனவணிகனில், பரிசளிப்பு நிதிவிளக்கம்.

27-ௗ தனவணிகனில், திரு. பாரதியார், திரு. K. ஆறுமுகம் என்பவர்களின் "கட்டுரை"

29-ௗ திருவையாறு, அரசர் கல்லூரித் திருவள்ளுவர் தமிழ்மாணவர் கழகம், "வாழ்த்துத் தீர்மானம்"

செப்டம்பர் 3 தனவணிகனில், "கட்டுரை"

17-ௗ தனவணிகனில், திரு. அரு. சுப்பிரமணியம் அவர்கள், "கட்டுரை"

அக்டோபர் 13 குளித்தலை, கம்பர் செந்தமிழ்ச்சங்க "வாழ்த்துத் தீர்மானம்"

13-ௗ திரு. வி. சொக்கலிங்கசெட்டியார், ஷை சங்கத்திற் படித்த 'வாழ்த்துப்பா"

---


## THE OCEAN OF WISDOM

**EDITED BY SWAMI VEDACHALAM**

An English Bi-monthly dealing with the history, the religion, the philosophy, and the literature of the Tamil country.

Each number contains 32 pages demy, and each subject when completed forms into a regular treatise.

The price of the 1st vol. Rs 3-8 as; postage extra.

The subscription for the 2nd vol. is Rs 5; postage 4 as extra; both must be paid in advance. Please send your subscription to the T. M. Press, Pallavaram.